* SRI K. S. ARDHANARESWARA GOUNDER :—" കണം ഉദവി ചപാ നായക്കർ അവർകളേ! കണം കല്വി മന്ത്രിയി കൊണ്ടുവന്നിരുക്കും ഇന്ത്രക് കല്വി മാൻയത്തെ നാൻ മനപ്പൂർവമാക ആതരിക്കിറേൻ. ആനാൽ തറ്പോതു കല്വിക്കാക ഒതുക്കപ്പട്ടിരുക്കും തൊകയൈപ് പാർത്താൽ അതിൽ മികവും കുറൈവാക ഇരുക്കിറതു. ഇപ്പൊഴുതു നമ് നാട്ടിൽ പടിപ്പു ഇല്ലാമൽ 80 ചതവികിതം ഇരുക്കിറാർകൾ. പോതിയ പണവചതി ഇല്ലാതതാൽ കല്വി വചതി അതികമാക ചെയ്യമുടിയാമലിരുക്കിറതു. പുള്ളി വിവരത്തുപ് പാർത്താൽ നിലവിക്കുത് തകുന്തപടി കല്വിക്കാക ചെസ് വരി വചൂൽ ചെയ്തുതാൻ കല്വിക്കുപ് പണം ഒതുക്കുകിറാർകൾ. അവ്വിത ആതാരത്തൈക് കൊണ്ടു തഞ്ചൈ പോൻറ ജില്ലാക്കളൈപ് പാർക്കും പൊഴുതു അങ്കു അതിക നഞ്ചൈപ് പാചന നിലങ്കൾ ഇരുപ്പതാലു അചാങ്കത്തിറ്കു അതിക കല്വി ചെസ് കിടൈക്കിറതു. ഇതനാൽ കല്വി അപിവിരുത്തിക്കാക അങ്കു അതികമാക തുകൈ ഒതുക്കിയിരുപ്പതാൽ നൂറ്റുക്കു 24 ചതവികിതം പടിത്തിരുക്കിറാർകൾ. ആനാൽ ചേലത്തിൽ പെരുംപാലും മേട്ടുപ് പാങ്കാന നിലങ്കൾ ഇരുപ്പതാൽ അതിക കല്വി ചെസ് വചൂലിക്ക മുടിയവില്ലൈ. അതനാൽ ഇന്ത ജില്ലാവിൽ 11 ചതവികിതംതാൻ പടിത്തവർകൾ ഇരുക്കിറാർകൾ. അറുനൂറു ഗ്രാമങ്കളിൽ ആരംപപ് പാടചാലൈയേ ഇല്ലാമലിരുക്കിറതു. ഇതൈയെല്ലാം ആരായ്ന്തുതാൻ ഗ്രാമ മക്കൾ കല്വിയിൽ മുൻനേറുവതറ്കാക ഇന്ത്രപ് പുതിയ ആരംപക് കല്വി തിട്ടത്തൈ തൈരിയമാക നമതു മുതൽ മന്ത്രിയി കണം രാജാജി അവർകൾ കൊണ്ടുവന്ത്താർ. നാട്ടിലേ നല്ല മുറൈയെ കൈയാള വേണ്ടുമെൻറാൽ അതൈ ചർവാതികാര തോരണൈയിൽതാൻ ചാതിക്ക മുടിയും. അന്ത മുറൈയിൽ മുതൽ മന്ത്രിയി നാട്ടിലേ കല്വി പെരുകുവതറ്കാക ഇന്ത നല്ലതൊരു കല്വിത് തിട്ടത്തൈക് കൊണ്ടു വന്ത്തുള്ളാർ. ഇന്ത എതിർ കട്ചിയിൽ തലൈവരായിരുക്കും നണ്പർ രാമമൂർത്തി അവർകൾ ഇന്ത നിർവാകത്തൈ ഏറ്റുക്കൊണ്ടിരുന്താൽ നിച്ചയമാകക് കട്ടായക് കല്വിത് തിട്ടത്തൈ പുകുത്തി യിരുപ്പാർ. ആനാൽ നമതു മുതൽ മന്ത്രിയി അവർകൾ നൻറുക ആരായ്ന്തു കട്ടായക് കല്വിയാകപ് പുകുത്തിനാൽ ഏഴൈ മക്കൾ തൊഴിലുക്കു ഇടൈയൂറു ഏറ്പടുമെൻറ കാരണത്തിനാൽ കട്ടായക് കല്വിമുറൈയെ ഏറ്പടുത്തവില്ലൈ.

" തറ്പോതു നമ് മാകാണത്തിൽ 20 ചതവികിതത്തിനർതാൻ പടിത്തിരുക്കിറാർകൾ. അതിൽ എവ്വളവോ പേർകൾ നൻറുക കഷ്ടപ്പട്ടു പടിത്തുവിട്ടു പല പട്ടങ്കൾ പെറ്റ പിറകു വേലൈയിൽല്ലാമൽ തിണ്ടാട വേണ്ടിയിരുക്കിറതു. അവർകളുടൈയ പട്ടങ്കളും പെട്ടിയിൽ പയനറ്റു പൂച്ചിയിർക്കപ്പടുകിൻറന. ഇവർകൾ വേലൈയില്ലാതു തിണ്ടാടുവതറ്കുക് കാരണം അവർകളുക്കു തൊഴിൽ മുറൈ തെരിയാതതുതാൻ. ആതലാൽ ഒരുവൻ വറുമൈയിൻറി ഇരുപ്പതറ്കും മുൻനേറ്റമ് അടൈവതറ്കും തൊഴിൽ കല്വി അത്തിയാവശിയമായിരുക്കിറതു. തൊഴിലൈയും ആരംപപ് പാടചാലൈയിലേയേ കറ്റുക് കൊടുപ്പതറ്കു പോതിയ പണമും ഇട വചതിയും ഇല്ലാമലിരുക്കിറതു. അതുവും തവിര സുതന്ത്രമ് പെറ്റ പിറകു നമ് നാട്ടിൻ കൈത്തൊഴിലൈ സുതന്ത്രിരമാക നേരടിയാക നടൈപെറും ഇടങ്കളൈ പാർത്തുത് തെരിന്തുകൊള്വതുതാൻ നല്ല മുറൈയാകും. തറ്പോതു വിവചായികളുടൈയ കുഴന്തൈകൾ തങ്കളുടൈയ തകപ്പനുടൈയ തൊഴിലൈ മേറ്കൊള്ളാമൽ ഐന്താവതു വകുപ്പു വരൈ പടിത്തുവിട്ടു അതറ്കുമേൽ പടിക്ക വചതി

24th December 1953] [Sri K. S. Ardhanareswara Gounder]

யில்லாமல் வேலையின்றி சுற்றித் திரிகிறார்கள். அவர்களுக்குத் தொழில் நுட்பம் தெரிந்திருந்தால் குறைவான படிப்பு படித்திருந்தபோதிலும் அந்தத் தொழிலினால் அவர்கள் கஷ்டப்படாமல் வாழ்வதற்கு உதவியா யிருக்குமல்லவா ? சர்க்கார் இந்தப் புதிய திட்டத்தை கொண்டு வந்தார்களே தவிர இதைப்பற்றி கிராம மக்களிடம் இத் திட்டத்தின் நற்பயன்கள் என்ன என்பதைப்பற்றி எடுத்துச் சொல்லவில்லை. குறிப்பாக எடுத்துக் கொண்டால் ஆரம்ப ஆசிரியர்களுக்கு இந்தத் திட்டத்தை எப்படி நடத்துவது, இதில் என்ன நன்மைகள் இருக்கின்றன என்பதைப்பற்றி சர்க்கார் போதுமான பயிற்சி அளிக்கவில்லை. உடனடியாக தகுந்தபடி ஆரம்ப ஆசிரியர்களுக்கு இம் முறையைப்பற்றி போதிக்க வேண்டும். கிராமங்களில் பல ஆசிரியர்கள் இதைப்பற்றி புரிந்துகொள்ளாமல் இருக்கின்றார்கள். இந்த திட்டத்தை ஆசிரியர்கள் கிராமங்களில் பிரசாரம் செய்து ஜனங்களுக்கு எடுத்து தெளிவுபடுத்தி யிருப்பார்களேயானால் இத் திட்டத்தில் இப்பொழுதிருக்கும் எதிர்ப்பு இருந்திருக்கவே முடியாது. கிராமப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களுக்கு போதுமான சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. போதுமான சம்பள உயர்வு இருந்தால் தான் ஆசிரியர்கள் உற்சாகமாகவும் அக்கரையுடனும் மாணவர்களிடம் ஊக்கம் காட்ட முடியும். அதை உடனடியாக செய்யுமாறு சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன். போதிய பணவசதி இல்லையானால் கல்வி செஸ் வரியை சிறிது உயர்த்தலாம்.

"கனம் ராஜாஜி அவர்களே எப்பொழுது வேண்டுமானாலும் இந்த நிர்வாகத்திலிருந்து வெளியேற்றலாம். ஆனால் இவ்வளவு சிறந்த திட்டத்தைக் கொண்டுவந்தவரை வெளியேற்றுவதனால் ஒரு அறிவாளியை இழப்பவர்கள் ஆவோம். கனம் ராஜாஜி அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்தத் திட்டத்தை நாடு முழுமையும் பரவச் செய்ய வேண்டும். ஆரம்பப் பாடசாலைகளின் நிலைமையை உத்தேசித்தும், ஆசிரியர்களின் நன்மையைக் கருதியும் பிள்ளைகளின் முன்னேற்றத்தைக் குறித்தும் நாட்டின் எதிர்கால அமைப்பைத் தெரிந்தும் இந்த அருமையான திட்டத்தைக் கொண்டு வந்தார். பிராமணர்களுக்கு வசதியையும் முன்னேற்றத்தையும் கொடுக்கத்தான் இந்த திட்டத்தைக் கொண்டுவந்தார் என்று எதிர்ப்பவர்கள் சொல்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டம் பிராமணர்களுக்குத்தான் கஷ்டத்தை உண்டாக்குகிறது. இவ்வளவு நாட்களாக அவர்கள் கஷ்டப்படாமல் குமாஸ்தாக்களாகவும் உத்தியோகஸ்தர்களாகவும் வகித்து காலத்தை நடத்தி வந்தார்கள். ஆனால் இத் திட்டத்தின் பிரகாரம் அவர்களும் கஷ்டப்பட்டு நாட்டின் கைத்தொழிலைக் கற்றுக்கொண்டால்தான் சுதந்திர நாட்டிலே வாழலாம் என்ற நிலைமைக்கு கனம் ராஜாஜி அவர்கள் கொண்டு வந்து விட்டிருக்கிறார். ஆதலால் இந்தத் திட்டம் பாரபட்சமின்றி நாட்டிற்கு நலன் பயக்கக்கூடியதாக இருக்கிறது. இத் திட்டத்தினால் அதிகமான மாணவர்கள் குறைந்த சிலவில் படிப்பதற்கு வசதியும் செலவின்றி தொழிலைக் கற்றுக்கொள்ளக்கூடிய வசதியும் ஏற்படுகிறது. 11–10 a.m.

"அடுத்தபடியாக சேலம் ஜில்லாவிலே 36 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஆனால் அங்கு ஒரே ஒரு கல்லூரிதான் இருக்கின்றது. அதுவும் முனிசிபல் கல்லூரிதான். அதில் முனிசிபல் சரகத்திலுள்ள உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குத்தான் முதல் இடம் சலுகை காட்டப்படுகின்றது. அவர்கள் போக வெளி மாணவர்களுக்கு போதுமான இடம் கிடைப்பதில்லை. வறுமை மிகுந்த ஜில்லாவாகையால் அவர்கள் வெளி ஊருக்குச் சென்று மேல் படிப்பு படிக்க வசதியில்லாமலிருக்கின்றது. சர்க்கார் இது போன்ற பிற்போக்கான இடங்களுக்கு தனிச் சலுகை காட்டி அடுத்த பட்ஜட்டில் துகை ஒதுக்கி வருகிற ஜூலை மாதத்தில் ஒரு புதிய கல்லூரியை சேலம் ஜில்லாவில் திறந்து வைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

"குறிப்பாக மேட்டூரை எடுத்துக்கொண்டால் இந்தப் பிரதேசத்தில் முக்கியமாக தொழிலாளர்கள் தான் வசிக்கிறார்கள். இங்கு தொழிற்சாலைகள் தான் அதிகம். அங்கு தொழிலாளர் குழந்தைகளுக்கு தொழில் கல்வி கற்றுக்கொடுக்கும் முறையில் (Technical or Polytechnic) ஸ்கூல் இந்த ஆண்டிலேயே உடனடியாக ஏற்படுத்திக்கொடுக்குமாறு சர்க்காரை கேட்டுக் கொள்ளுகிறேன்."

[24th December 1953

11-12 a.m. * SRI K. PARTHASARATHY :—" கனம் உதவி சபாநாய்கர் அவர்களே, இன்று இந்தசபையில் கொண்டுவரப்பட்டிருக்கும் கல்விமான்ய பிரேரேபணையை நான் ஆதரிக்கிறேன். எதிர்கட்சியால் கொண்டு வரப்பட்டிருக்கும் வெட்டுப்பிரேபணையை எதிர்கின்றேன். இன்று நம்முடைய ராஜ்யத்தில் கல்விக்காக சர்க்காராலே செய்யப்படும் செலவு குறைவானது என்றெல்லாம் இங்கு பலர் குறிப்பிட்டார்கள். நான் அந்த எண்ணத்தில் இல்லை. நம்முடைய வரவு செலவு திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகவும் கணிசமானதாகவே இருக்கிறது. முந்தைய கணக்குகளையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இப்போது கல்விக்கு நம் ராஜ்யத்தில் அதிக கவனம் அளிக்கப்பட்டிருக்கிறது. மற்ற ராஜ்யங்களில் செலவிடப்படும் தொகையோடு நம் ராஜ்யத்தின் தொகையை ஒப்பிட்டுப்பார்க்கும் போது பெருமைப் படக்கூடிய அளவிலேயே இருக்கிறது.

" கல்விக்காக நம்முடைய சர்க்கார் அதிக அக்கரை எடுத்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. நமக்கு கொடுத்துள்ள புள்ளி விவரங்களிலிருந்து ஆரம்ப கல்விக்காக நேரடியாக சர்க்கார் 67·6% தன் நிதியிலிருந்து செலவிடுகிறது. ஸ்தல ஸ்தாபனங்களிலிருந்து 25·4% செலவு செய்யப்படுகிறது. மிகுதியை தனிப்பட்டவர்கள் செலவிட்டு சர்க்காரிடம் மானியம் வாங்கி பள்ளிக்கூடங்கள் நடத்துகின்றனர். தனிப்பட்டவர்கள் ஏற்கும் செலவு 100க்கு 7 தான். ஆகையால் 93 சதவிகிதம் சர்க்காரானும், ஸ்தல ஸ்தாபனங்களாலும் ஆரம்பக்கல்விக்கு செலவிடப்படுகிறது.

" எதிர்கட்சி அங்கத்தினர் ஆசிரியர்களுக்கு சம்பளம் அதிகமாக கொடுப்பதில்லை, அவர்கள் நிலை உயர வேண்டுமென்றார்கள். அதில் உண்மை இருக்கத்தான் இருக்கிறது. தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு சம்பளமே ஒழுங்காக கொடுக்கப்படுவதில்லை என்றும் சொல்லப்பட்டது. இந்த அடிப்படையிலே பார்த்தால் தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் பள்ளிகள் செய்யும் செலவு மொத்தச் செலவில் 7% க்கும் குறைவாகவே இருக்கிறது. இந்த முறையிலே செலவிடப்படும் தொகையை கொண்டுபார்த்தால் கல்விக்காக நம் சர்க்கார் சிறந்த சேவை செய்கிறது. இதில் பொதுமக்களும், எதிர் அரசியல் கட்சியும் ஒத்துழைக்கின்றனவா என்று பார்த்தால் பெரும் ஏமாற்றமே. இதற்கு நாம் வெட்கப்படத் தான் வேண்டியிருக்கிறது.

" தற்காலத்தில் அரசாங்கம் பொதுமக்களுடைய நன்மைக்கான ஸ்தாபனம் (வெல்பேர் ஸ்டேட் ஐடியல்) என்று சொல்லுகிறோம். சர்க்கார் முயற்சிகளில் அரசியல் கட்சிகள் எவ்வளவு அக்கரை செலுத்துகின்றன என்று பார்க்கும்போது, வருத்தப்படக்கூடிய நிலைமைதான் ஏற்படுகிறது. கட்டாயக் கல்வி என்னும் முறை சிலவருஷங்களுக்குள்ளே ஏற்பட்டது. அந்த முறையிலே அநேக சென்டர்களில் கட்டாயக் கல்வி புகுத்தப்பட்டது. புதியதாக ஏற்படுத்தும் போது அநேகம் பிள்ளைகள் சேர்க்கப்பட்டார்கள். ஆனால் நாளடைவில் ஓரிரண்டு பிள்ளைகள் வருவதுகூட கடினமாகி attendance roll குறைந்துகொண்டேவந்தது. பின்னர் ஆசிரியர்கள் வேலையிலிருந்து oust செய்யப்படுகிறார்கள். ஆகையால் பொதுமக்கள் ஒத்துழைப்பு அவசியம் என்பது தெரியவரும். தங்கள் தங்கள் ஊருக்கு பள்ளிக்கூடங்கள் வேண்டுமென்று கேட்பார்கள். சர்க்கார் உடனடியாக கவனிக்கவேண்டுமென்று கிளர்ச்சி செய்வார்கள். பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்படும். முதலில் இரண்டு உபாத்தியாயர்கள் இருப்பர். சில பிள்ளைகள் வரும். நாளடைவில் பிள்ளைகளின் எண்ணிக்கை குறைந்து ஒரு உபாத்தியாயராக மாறுவார். அதுவும் சில மாதங்களில் குறைந்து கடைசியில் பள்ளிகள் மூடப்படுகின்றன. ஆகவே மக்களுக்கு பள்ளிக்கூடம் வேண்டுமென்றும், சர்க்கார் இதற்கு மேலும் அதிகமாக செலவிடவேண்டுமென்றும் கிளர்ச்சி செய்வதைவிட பள்ளிகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு வேண்டிய ஆர்வம் மக்களிடையே ஏற்பட அக்கரை காட்டுவார்களேயானால், மக்களுக்கு உணர்ச்சியும், உற்சாகமும், அக்கரையும் ஏற்பட்டு கல்வித்துறையில் மக்கள் முன்னேற முடியும்.

" ஆனால் எனக்கு ஒரு அபிப்பிராயம் உண்டு. அதாவது நம்முடைய நாட்டிலே விஞ்ஞான ரீதியாக கல்வி அமைய வேண்டுமென்பது. எனக்கு

24th December 1953] [Sri K. Parthasarathy]

முன் எதிர்கட்சி தலைவர்கூட இதுபற்றி கூறினர். நம்முடைய தொழில்கள் பெரிய கைத்தொழிலா, குடிசைக் கைத்தொழிலா என்ற அபிப்பிராய பேதங்கள் இருக்கமுடியும். ஆனால் கல்வி விஞ்ஞான ரீதியாக அமைய வேண்டுமென்பதில் யாருக்குமே அபிப்பிராயபேதம் இருக்க முடியாது என்று நினைக்கிறேன். பார்க்கப்போனால் நம்முடைய கல்வி அவ்வாறு அமையவில்லை. இப்போதுள்ள நிலைமையில் கிராமமக்களின் அன்றாட வாழ்க்கைக்கு கல்வி அவசியமானதாக இருக்கவில்லை. மக்களை தொழிலிலே அக்கரை எடுத்துக்கொள்ள செய்யவேண்டும்; அது செய்யப்படவில்லை. அதற்குக் காரணம் கல்வித் திட்டம் மட்டும் அல்ல. நாட்டிலே ஆரம்பபாடசாலைகளிலே பயின்றவர்கள் தொழில்களை கற்றுக்கொள்ள தமிழிலே நல்ல தொழில் வளர்ச்சி புத்தகங்கள் கிடையாது. விவசாயத்தைப்பற்றி விவசாயி படித்துத் தெரிந்து செய்யக்கூடிய தமிழில் விவசாயத்தைப் பற்றி புத்தகம் நம் நாட்டிலே இல்லை. ஆரம்பப் பள்ளிகளில் 5-வது வரை படிக்க முடிகிறது. அதற்கு பிறகு ஆடு, மாடு வளர்ப்பு, விவசாயம் போன்றவைகளைக் கற்றுக்கொள்ளக்கூடிய எளிய தமிழ்ப் புத்தகங்கள் இல்லை. பிறரைக்கேட்டு அறிந்து செய்யக்கூடிய அள்விலே தொழில் பயிற்சி உள்ளது. ஆகையினால்தான் தமிழ் நாட்டில் மக்கள் கல்வியில் அதிகம் அக்கரை எடுத்துக்கொள்ளவில்லை. பிற நாடுகளைப்பார்க்கலாம். எந்த புக்-ஸ்டாலிலும் ஒரு தச்ச வேலை செய்வதற்கோ, Smithy வேலை செய்வதற்கோ அல்லது வேறு ஏதாவது ஒன்றைப்பற்றித் தெறிந்து கொள்ளவோ வேண்டுமானால் அதற்கு மலிவானவிலையில் எளிய நடையில் பிறருடைய உதவியின்றி சிறிது படித்தவனும் தானே படித்து அறிந்து கொள்ளக்கூடிய பல ஆங்கில புத்தகங்கள் இருக்கின்றன. இதனால் அங்கு தொழில்விருத்தி ஏற்படுகிறது. கல்விக்கு அவசியம் இருக்கிறது. மக்களிடையே கல்வி யறிவு பெறவேண்டுமென்ற ஆர்வம் ஏற்படுகிறது.

"நம் நாட்டிலும் இம்மாதிரி தொழில்விருத்தி ஏற்படக்கூடிய வகையில் எளிய தமிழ் புத்தகங்கள் வெளிவரச் செய்யவேண்டும். வெளி நாடுகளில் எந்தத் துறையில் வேண்டுமானாலும் பிறர் உதவியின்றி தானே படித்து செய்யக்கூடியது போல் நம் நாட்டிலும் எல்லாத் துறைகளிலும் இம்மாதிரியான தொழில் அறிவு புத்தகங்களை தமிழில் வெளியிட்டு மலிவான விலையில் மக்களுக்கு கிடைக்க உதவுமாறு கல்வி அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவ்வாறு பெருமளவில் முடியாவிட்டாலும், சிறிய அளவிலாவது சிறுசிறு புத்தகங்களை மலிவான விலையில் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இம்மாதிரியான புத்தகங்கள் நம்நாட்டு கிராமப்புற மக்களுக்குப் பெரிதும் பயன்படும். மக்கள் கல்வியில் ஆர்வம் கொள்ள காரணம் ஏற்படும். வெறும் அழகான வர்ணப்படம் போட்ட ஆபாசப் புத்தகங்களை வெளியிடுவதைக் காட்டிலும், இம்மாதிரியான புத்தகங்கள் வெளிவந்தால் வெரும் கல்வி அபிவிருத்தி அடைவதோடு, தொழிற்கல்வியும் அபிவிருத்தி அடையும் நாம் உண்மையான கல்விக்கு பணத்தைச் செலவிட்டவர்களாகவும் ஆவோம். ஆகவே இம்மாதிரியான அபிவிருத்தியில் அக்கரைகாட்டுமாறு கனம் மந்திரி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

* SRI V. R. KRISHNA AYYAR :—" Mr. Deputy Speaker, I do not wish to cover the ground already covered by the previous speakers regarding the Modified Scheme of Elementary Education —that grandiloquent expression—which has been criticised and, according to me, deservedly. There was a strange incident here, the accused choosing the assessors and judges, that is to say, the Government themselves appointing their own Committee to give an award upon this Scheme. But, I should say that in spite of this selective privilege of appointing their own Committee, the award or the verdict has not been very favourable and the Parulekar Committee has really damned the Scheme with faint praise, if I may say so. I do not wish to dwell on that aspect of the 11-20 a.m.

[Sri V. R. Krishna Ayyar] [24th December 1953

matter as it has been covered already and as it is sure to come up again for discussion at a later stage of the present session. I must mention that education has been going on as usual as it was before although the Government insisted that the Modified Scheme would be put through notwithstanding the Assembly's decision to the contrary. The Scheme has not been simply working; it has just been officially working. In practice, it is not working, so much so, there is not much of disturbance or change or upset or upheavel anywhere in Malabar. I can speak about Malabar and I know how the boys have been going to schools as before and they have been returning home as before though the attendance registers may show three hours for one set of people and three hours for another set of people. Officials on the spot know the practical difficulties, and they might probably wink at it. But so far as the Government and their advisers are concerned, the Scheme is working very wonderfully, there is not much of unrest or agitation and things are passing off as usual. If this is the kind of ostrich-like policy that is going to be adopted, there need be no bother about it. But if it is a case of incisive investigation and trying to find out how the scheme is working, there is hardly any doubt that the scheme is a flop and it is not going to subsist. If you go to villages, you will see that it is not working there. I am speaking with reference to villages in Malabar.

"Now, I must certainly pass on to the new system, that has been introduced, of direct payment to the teachers. I certainly compliment the Government on this bold policy of paying directly to the teachers. This is really an admission of the weakness of the existing system. The present system of trading in education and particularly treating primary education as an article of merchandise, of purchase and sale and entrusting it to private agencies or private managements is really vicious. It really does not work on the administrative side; and it does not work on the practical side also. The whole thing has been reduced to mere profit and loss business. The sooner we get rid of this system of trading in education, that is, aided elementary education scheme, the better for us. Making payments directly to teachers instead of through the management, that is, bypassing the management, is only a half-way house. Mere payment of salary is not going to cure all the ills attached to the aided system. On the other hand, the only way in which the problem of primary education can be solved so that the younger generation may benefit, is by the State taking over the administration of schools or entrusting them to public bodies like panchayat boards, district boards and taluk boards if they are going to be revived. It should never be entrusted to mere private agencies. The present system of paying directly to the teachers is a step in the right direction. At the same time, once again I emphasise and urge the Government to go the whole hog and take over the management of primary institutions and administer them as part of State work. That is the only way by which the Government of the State can fulfil the obligations laid down under the Directive Principles of the Constitution.

24th December 1953] [Sri V. R. Krishna Ayyar]

"There is yet another point that I wish to emphasise on this occasion and it is a very important one. It is about the technological progress that has got to be made by the country. We are living in a scientific age. We have got to make scientific progress. There is no point in merely having the old type of educational system that has been handed down to us by the foreigner during the period of his domination. In this scientific age—almost atomic age—any country survives only according to the extent of progress it is able to make on the technological or scientific side. Let us see, in the Budget, what allotment is made on the technological side. In fact, we do not have any higher technological institutes run by the Government. There is, perhaps, only one institute in the whole State, that is, the Madras Institute of Technology. I remember that on an earlier occasion when Dr. M. V. Krishna Rao was here as Education Minister, I had put an interpellation about the subvention or grant that the Government had made to institutions which are not able to stand on their own legs. He gave an answer that the Government would consider the feasibility of making some grant in the future. I wonder if anything has been done in the matter, whether any grant has been given to the Madras Institute of Technology or for that matter any Institute of Technology. It is time that we have some courses available for Higher Technology. Technological progress is the acid test of real progress of a nation. If the Government do not make any provision in this Budget for higher technological courses, we are really going to be poorer for it. In this connection, I may also mention that there must be a technological bias introduced in the educational system right from the secondary stage. We have some Polytechnics. We must have more Polytechnics. What we have already got is inadequate. We must have many more. Unless we emphasise rightly the need for more Technological Institutions, we will be going in a backward direction. I, therefore, request the Government to give better thought for technological studies and here I must say that Technological studies are very, very costly. The engineering course or any other course in the Institute of Technology will be very, very costly. I believe it is not the idea of the Government that only children of aristocrats and big officials should go and get admission to these costly courses; the children of poor men must also have avenues open to them for having Technological education. So, these courses must be made less expensive. More scholarships should be made available and further facilities must be given to the poor people and backward communities in the State. I, therefore, request the Government to reconsider their policy regarding techonological studies.

"I may mention in passing and in conclusion that there has been one local matter which I wish to bring to the notice of the Government. It is about the Government Brennen College which is a first-grade college. Although it is a Government institution, it has been complaining about lack of buildings. The complaint has been standing for several years. Hon. Ministers have come and presided over its Annual Day function, which is one of the

[Sri V. R. Krishna Ayyar] [24th December 1953

methods of trying to convince the Government as to the real necessity of the college for better buildings. The University has threatened to disaffiliate the Government Brennen College, Tellicherry. They have notified that unless a suitable building to house the college is provided it will cease to exist. The Government do not seem to have been frightened by this threat. May be they are not seriously concerned with the existence or continuance of the Government Brennen College. May be that is the case. But we, in North Malabar, are deeply concerned with it. On behalf of the people of North Malabar I wish to reiterate this point and urge upon the Government to bestow their immediate attention upon the immediate construction of a suitable building to house the College. That is the need of the hour. I am sorry to note that an element of competition, an element of rivalry has crept in. It is not within the pen of the Education Minister to shift overnight the college from Tellicherry to some other place. Nor is it correct on the part of the Government to plead financial stringency in the matter and stipulate a condition that failing substantial donations from the public of Kottayam and Tellicherry there is no other go but to shift the college to Cannanore or some other place. I think the primary concern of any democratic Government is not to wait for subscriptions from the public in respect of educational institutions. On the other hand, it is the bounden duty of Government to rush to the aid of their own institution, whose continuance is in doubt. Nay, it is all the more important that Government should not ride roughshod over the wishes of the people of Tellicherry, wherein the college is situated. Whether or not the people of Tellicherry or Kottayam subscribe a lakh or two lakhs of rupees for the construction of a building for the college, it is the primary duty of the Government (I want to reiterate this point) to maintain the Government Brennen College, Tellicherry. It is also absolutely necessary that being a Government institution catering to the needs of all the students of North Malabar, that college should be housed in a suitable building which the University regulations prescribe. I may also incidentally mention that some public contributions have also come in. I therefore request the Government to waive the present conditions and regulations which they have prescribed in this regard. As a citizen of North Malabar and as one deeply interested in the education of boys and girls in Tellicherry, I once again request Government to immediately proceed with the construction of a suitable building to house the Government Brennen College in accordance with the University regulations."

11-30 a.m.

DEPUTY SPEAKER :—" The hon. Member's time is up."

* SRI V. R. KRISHNA AYYAR :—" I also understand that the Tellicherry Municipality has come forward and has offered its building to house the college. As such we, the people of Tellicherry Municipality, are now devoid of proper civic life. Let me conclude by once again requesting the Government to immediately proceed with the construction of a suitable building for the

24th December 1953] [Sri V. R. Krishna Ayyar]

Government Brennen College and thus incidentally restore to the Municipality its office which has at present been lent for the temporary location of the college."

* SRI K. UPPI :—" Mr. Deputy Speaker, I do not wish to detain the House with regard to the policy or general criticism of the Budget. Within two or three months from now on, we will have a full-fledged Budget discussion when the Budget for 1954–55 will be presented in February or March 1954. I shall content myself with bringing to the notice of Government certain relevant matters.

" I heartily associate myself with the sentiments expressed by the previous speaker, Sri V. R. Krishna Ayyar, about the construction of a building for the Government Brennen College, Tellicherry. It is very sad to note that in the matter of providing amenities in the educational sphere, Malabar is treated like Cinderella. Hitherto I was imagining that only in the matter of providing us in Malabar with more amenities by undertaking project works and the like, we have been treated in a Cinderella-like fashion. But now it has crept into the educational sphere also. This cry for a building for the Government Brennen College, Tellicherry has been there for the last several years. The people of North Malabar, the people of Kottayam taluk especially, have already come forward with substantial donations in this regard. But the response from the Government has been not up to the mark. I do hope that taking into account the sentiments expressed on the floor of the House by us hailing from North Malabar, the Government would immediately proceed with the construction of a suitable building to house the Government Brennen College at Tellicherry. With regard to the same college, I have once more to bring to the notice of the Government that the absence of an Urdu lecturer for the B.A. class is a great handicap to students who come out successful in the Intermediate classes from the same college.

" Let me now come to the new Educational Scheme, I mean, the modified scheme of elementary education. It is said that the new scheme is not a success in North Malabar. I am a villager hailing from North Malabar. I know the condition of the village schools. The success of the scheme primarily depends upon the teachers in village schools. It is working satisfactorily in many schools; but the successful execution of the present scheme rests mainly with the teachers in charge of the village schools. Unfortunately in North Malabar I have found that in some schools where teachers are of leftist political leanings, it is not working properly. The success of the scheme could be assured only if the political leaning of the teachers in charge of the village schools is corrected, because the success or failure of the scheme depends upon the political attitude of the teachers. We have to look to that and let the Government first enforce discipline amongst the teachers. The scheme is bound to succeed then.

[Sri K. Uppi] [24th December 1953

"Let me revert to a subject which we had already brought to the notice of the Government during the time when the last Budget was discussed, I mean, the subject concerning 'Muslim Education'. I regret to say that the Government had been uncharitable to us, the Muslims, in this regard. We have been requesting the Government to provide for the teaching of Urdu and Arabic in the Government Arts College in Madras. But I am sorry to say that Government have not yet taken any action in this matter. Another matter which we brought to the notice of the Government is this. In Malabar Sanskrit Pandits and Arabic Munshis were recruited by the Malabar District Board on the same scales of pay. But now the pay of Arabic Munshis with 20 or more years of service under the District Board High Schools in Malabar was suddenly cut by half by the District Board. Repeated representations bringing this grievance to the notice of the Government and requesting them to do bare justice to these unfortunate Muslim teachers have not yet borne fruit. I am only pleading for justice and fairness for the Muslims in Malabar. I am not demanding any extra benefit for them.

"Coming to the 'religious education' in schools I am thankful to the Government for permitting the imparting of 'religious education' in school buildings *out* of school hours. But let me inform them that the officers in charge of education in the districts, I mean, the inspecting officers of the Education Department, have not implemented the Government Order. The officers in charge of education in Malabar seem to be against the imparting of 'religious education' out of school hours, within the school building in spite of the fact that an order has been issued by Government permitting the same."

DEPUTY SPEAKER :—"Dr. (Mrs.) Soundaram Ramachandran.

(Not finding the Member in her seat, the Deputy Speaker was looking up for her. The Member was seen getting up from a back seat in the same block.)"

THE HON. SRI C. SUBRAMANIAM :—"Sir, may I suggest to hon. Members that while making their speeches, they might remain in their own seats? It will avoid confusion and that is the Parliamentary practice also."

DEPUTY SPEAKER :—"I think most of the Members are in their seats." (The Chief Minister was heard to remark : 'The mike may be out of order.')

11-40 a.m. **DR. SRIMATHI SOUNDARAM RAMACHANDRAN** :—"கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த கல்வி மான்யத்தை சர்க்கார் கொண்டுவந்திருப்பதை ஆதரித்து இந்த கல்வி திட்டத்தைப்பற்றியும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய நண்பர் ஸ்ரீமான் கே. பார்த்தசாரதி அவர்கள் சில புள்ளி விவரங்களைச் சொன்னார். இந்த ஆரம்பக் கல்விக்காக சர்க்கார் செலவிடப்படும் தொகை அதாவது சர்க்கார் மூலமாகவும் டிஸ்திரிக்ட் போர்டு மூலமாகவும் செலவு செய்யப்படுவது 93 சத

24th December 1953] [Dr. Srimathi Soundaram Ramachandran]

விகிதமும், உதவி பெறும் அதாவது எய்ட் ஸ்கூல் மானேஜ்மெண்ட் மூலம் செலவழிக்கப்படுவது 7 சத விகிதமும் என்று சொன்னார். வேறு எந்த மாகாணத்திலும் இவ்வளவு தொகை உதவி பெறும் ஸ்தாபனங்களுக்கு உள்பட செலவு செய்யப்படவில்லை. அந்த முறையில் இந்த ஆரம்பக் கல்வி நடத்தப்படவில்லை. அநேகமாக நகரங்களுக்குத் தான் அந்த செலவை திருப்பி இருக்கிறார்கள். ஆகவே நம் சர்க்கார் ஆரம்பக் கல்விக்காக மிக நல்ல கணிசமான தொகையை செலவழிக்கிறார்கள். என்றாலும் இப்பொழுதும் நம் முன் இருக்கும் பிரச்னை என்ன ? கிராமங்களில் இன்றைக்குப் பார்த்தால் 20 சத விகித குழந்தைகள்கூட பள்ளிக்கு வரவில்லை. அவர்களும் ஒழுங்காக வருவது இல்லை. ஏன் ? நாம் கிராமத்துடன் தொடர்பு வைத்துக் கொள்ளாமல் இருந்ததால்தான். ஆகவே நம்முடைய சுதந்தர நாட்டில் வயது வந்த எல்லோருக்கும் வாக்குரிமை கொடுத்திருக்கும் நாளில் குழந்தைகள் எல்லோரையும் படிக்க வைத்து படிக்கச் செய்யும் வசதி அவர்களுக்குச் செய்து கொடுப்பது நம் முன் இருக்கும் பிரச்னை. அதை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு ஆராயுமுன் மற்ற எந்த திட்டங்களை அமுலுக்குக்கொண்டுவரலாம் என்று சிந்திக்கவேண்டியது எல்லோருடைய கடமை. அதற்காக சர்க்கார் அவர்கள் ஒரு கணிசமான தொகையை ஆரம்பக் கல்விக்குச் செலவு செய்து வருகிறார்கள். ஆனாலும் இப்பொழுது 30 சத விகிதம் தான் செலவு செய்கிறார்கள். அந்த திட்டப்படி செலவு செய்ய வேண்டும் என்றாலும் இதை விட மூன்று மடங்கு அதிகம் செலவு செய்ய வேண்டியதாக இருக்கும். அதற்கு நிதி இடம் கொடுக்குமா என்பதைப் பார்க்கவேண்டும். அப்படி இடம் கொடுக்காமல் போனால் இப்பொழுது இருக்கும் நிதியைக் கொண்டே அதிகமான குழந்தைகளை எப்படி பள்ளிக்குக் கொண்டு வர முடியும் என்பதை ஆராய வேண்டும். இப்பொழுது இருக்கும் நிலையில் நமக்கு திருப்தி கொடுக்கிறதா என்று பார்க்கவேண்டும். இல்லை என்றால் அதை மாற்றி அமைக்க வேண்டும் என்பதை நாம் ஆராய வேண்டும். இப்பொழுது பள்ளிக்கூடங்களில் ஐந்து வகுப்புகளில் இருந்தால் இரண்டு உபாத்தியாயர்கள் குழந்தைகளுக்கு படிப்புச் சொல்லிக் கொடுக்கின்றனர். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இவ்விதம் இரண்டு உபாத்தியாயர்கள் ஐந்து வகுப்புகளுக்கு பாடம் சொல்லிக்கொடுத்தால் அதுவும் ஐந்து மணி நேரம் பாடம் சொல்லிக்கொடுத்தால் தரம் எப்படி உயர முடியும் என்பதைப் பார்க்க வேண்டும். அவர்கள் என்ன செப்பிடு வித்தை பண்ணுவதா ? இவ்விதம் ஒரு உபாத்தியாயர் ஒரு வகுப்புக்கு மூன்று மணி நேரம் பாடம் சொல்லிக் கொடுத்தால் தரம் உயரத்தானேவேண்டும் என்பதை எல்லோரும் கவனிக்கவேண்டும். இப்பொழுது இருக்கும் பள்ளிக்கூடங்களை வைத்துக்கொண்டே கல்வியை எல்லா குழந்தைகளுக்கும் கற்றுக்கொடுக்கவேண்டும். புதுப் பள்ளிக்கூடங்கள் கட்டுவதாக இருந்தால் கோடிக்கணக்கான பணம் வேண்டும். நம்மிடம் இப்பொழுது அதற்கு வேண்டிய பணம் இல்லை. இப்பொழுது பொது ஜனங்களும் உதவ முன் வரவில்லை. இதைத் தெரிந்துகொண்டுதான் இருக்கும் பள்ளிக்கூடங்களை வைத்துக்கொண்டும் இருக்கும் உபாத்தியாயர்களை வைத்துக்கொண்டும் பள்ளிக்கூடத்திற்கு வரும் குழந்தைகளை அதிகரிப்பது என்றால் இதற்கு கல்வி முறையில் ஏதாவது ஒரு மாறுதல்தான் செய்யவேண்டும். இதை எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டியதுதான். இப்பொழுது ஒரு உபாத்தியாயர் ஐந்து மணி கொல்லிக்கொடுப்பதை விட மூன்று மணி நேரம் சொல்லிக் கொடுத்தால் எல்லா குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுக்க வசதி இருக்கும். அதனால் படிப்பின் தரமும் அதிகமாகிவிடும். இவ்விதம் மூன்று மணி நேரம் சொல்லிக்கொடுக்கச் சொல்லி குழந்தைகளின் படிப்புத் தரத்தை உயர்த்த வேண்டும் என்று ஒரு திட்டத்தைக்கொண்டுவந்தால் அதற்கு எதிர்ப்பு எப்படி இருக்க முடியும். இருக்க முடியாது. நிச்சயமாக இப்பொழுது குழந்தைகள் அதிகமாக வருவதை நான் பார்த்திருக்கிறேன் மற்றவர்களும் பார்த்திருப்பார்கள். இதற்கு ஏன் குழப்பத்தைக் கொண்டு வருகிறார்கள் என்பது தான் தெரியவில்லை. இந்தத் திட்டம் ஏற்பட்டு சில மாதங்களில் அபிவிருத்தியைக் காட்டி இருக்க முடியாது. இப்பொழுது போதுமான அபிவிருத்தி காட்டவில்லை என்பது எனக்குதெரியும். சில் இடங்களில் நிச்சயமாக அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்

[Dr. Srimathi Soundaram Ramachandran] [24th December 1953

காட்ட விரும்புகிறேன். இந்த மாறுதலை ஏற்படுத்தினால் நிச்சயமாக கிராமங்களில் மூன்று மணி நேரம் படிக்கக் குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்கு வருவார்கள். இந்த மாதிரி இரண்டு ஷிப்டுகள் வைத்தால் அதிகமான குழந்தைகள் கிராமங்களில் பள்ளிக்கூடங்களுக்குவருவார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். இப்பொழுது மதுரை, கோயமுத்தூர் மற்றும் முனிசிபல் கார்போரேஷன் நகரங்களிலும் திருவநந்தபுரம் கொச்சி தேசத்திலும் இந்த அனுபவத்தை அவர்கள் அடைந்து வருவது எனக்கு தெரியும். மற்ற இடங்களைப்பற்றி எனக்கு அவ்வளவாக தெரியாது. அந்த இடங்களில் மூன்று மணி நேரம் படித்தால் போதும் என்று ஷிப்ட் முறை பல வருஷங்களாக நடந்துவருகிறது. அங்கு ஒரு கிளர்ச்சியும் கிடையாது. நம்முடைய நகரங்களிலும் இப்பொழுது நடந்து வருகிறது. அதற்கும் கிளர்ச்சி இல்லை. ஆகவே மதுரையில் ஐந்து வருஷங்களாக இருக்கிறது. இந்த ஷிப்ட் முறை வேண்டாம் என்று யாரும் தடை செய்யவில்லை. இன்னும் அநேகம் நகரங்களிலும் நடந்துகொண்டுவருகிறது. மக்கள் அதை ஏற்றுக்கொண்டு தான் இருக்கிறார்கள். பரவலான முறையில் இந்த ஷிப்ட் முறையை அமைத்து நிச்சயமாக அமுலுக்குக் கொண்டு வரப்போகிறோம். அதுவும் வரத்தான்வேண்டும். கிராமங்களில் பரவலான ஷிப்ட் முறையைக் கொண்டு வருவதைக் காட்டிலும் இன்னும் அபிவிருத்தி முறையில் அதைக்கொண்டு வரலாம். இந்த மூன்று மணி படிப்போடு குழந்தைகள் கிராமங்களுடன் நேரடி தொடர்பு இருக்கும்படியான முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். அதற்காகத் தான் இப்பொழுது இந்த புது கல்வித்திருத்தம் வந்திருக்கிறது. கட்சி மனப்பான்மையை விட்டு விட்டு கல்வித் துறையில் எடுத்து நோக்கினால் இந்த உண்மை நமக்கு நன்றாகத் தெரியும். எந்த சீர்திருத்தம் செய்தாலும் எதிர்ப்பு வருகிறது. அதற்காக ஹிந்துப் பத்திரிகையையும் ஆசிரியர் சம்மேளனத்தையும் எடுத்துக்காட்ட வேண்டியது அவசியம் இல்லை. நாம் அடிமைகளாக இருந்த காலத்தில் மிதவாத பத்திரிகைகள் என்ன சொல்லியது. நாம் அமைதியாகப் போகவேண்டும். வேகமாகப்போகவேண்டாம் என்று சொன்னது நமக்கு எல்லோருக்கும் தெரியும். கல்வியை தொழில் முறையில் அமைக்க வேண்டும், அதற்கு ஹேதுவாய் ஆதாரக் கல்வியை அமைக்கவேண்டும் என்று அன்று காந்திஜி நாளில் கிளம்பியபோது எல்லோருக்கும் தெரியும் ஜனங்கள் அதை எப்படி எதிர்த்தார்கள் என்பது. அப்பொழுது அதை ஜனங்கள் எதிர்த்தார்கள், அரசாங்கம் எதிர்த்தது, அப்பொழுது மெயில் பத்திரிகை என்ன எழுதியது. கல்வி ஸ்தலத்தை ஒரு ஜின்னிங் பாக்டரியாக மாற்றவேண்டாம் என்று சொன்னது ஞாபகமில்லையா ? இப்பொழுது ஆதரவு கொடுக்கிறார்கள். மதிப்பு கொடுக்கிறார்கள் அதற்கு இப்பொழுது மற்ற நாட்டினரும் மதிப்பு கொடுக்கிறார்கள். அந்த காலத்தில் எதைக் கொண்டுவந்தாலும் எதிர்ப்பு இருக்கத்தான் செய்தது. அதன் தரம் அரசியல் கட்சிக்குத் தெரியாது. ஆகவே இதைச் சரியான முறையில் ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களுடைய மனதை மாற்றவேண்டும். எதிர்ப்புக்குப் பயந்து குழப்பத்திற்குப் பயந்து நல்ல சீர்திருத்தத்தைக் கைவிட்டால் பயன் அடைய முடியாது. இந்த ஆதாரக் கல்வியை இந்தியா சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். மற்ற மாகாணங்களும் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். மற்ற மாகாணத்தைக் காட்டிலும் மதராஸ் மாகாணத்தில் ஆதாரக் கல்வித்துறையில் நல்ல சீர்திருத்தம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு கனம் மந்திரி அவர்கள் புள்ளி விவரங்கள்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த மாகாணம் ஆதாரக் கல்வி விஷயத்தில் பின் வாங்கவில்லை. இந்த திட்டத்தைப்பற்றி ஒன்று சொல்லவிரும்புகிறேன். அது எங்களுடைய மதுரையைப் பற்றியது. அங்கு சில கிராமங்களில் அபிவிருத்தி அடைந்து இருக்கிறது. மதுரையைப்பற்றி எனக்கு கொஞ்சம் தெரியும். சில கிராமங்களைப்பற்றி தெரியும் மாகாணம் பூராரவும் தெரியாது. என்னுடைய ஜில்லாவின் புள்ளி விவரங்கள் தெரியும். சமுதாய நல திட்டம் அமுலுக்கு வந்த இடங்களில் ஹரிஜனங்கள், வலையர்கள், வேடுவர்கள் இவர்கள் பிற்போக்கு ஜாதியாக இருந்தாலும் அவர்களுடைய குழந்தைகளில் நூற்றுக்கு நூறு சத விகிதம் குழந்தைகள் மேலூர் மதுரை பள்ளிக்கூடத்திற்கு அவர்கள் போகிறார்கள் என்று சொன்னால் அது மிகைப்படுத்திய நிலைமை என்று சொல்லுகிறார்கள்,

24th December 1953] [Dr. Srimathi Soundaram Ramachandran]

நான் பெற்றோர்களிடம் போய் காலையில் இரண்டு குழந்தைகளைக் பள்ளிக் கூடத்திற்கு அனுப்புங்கள் மத்தியானம் இரண்டு குழந்தைகளை பள்ளிக் கூடத்திற்கு அனுப்புங்கள் காலையில் வந்தது மத்தியானம் வீட்டு வேலை களை பார்த்துக்கொள்ளும், மத்தியானம் வந்தது காலையில் வீட்டு வேலை களைப் பார்த்துக்கொள்ளும் என்று சொன்னேன். பிறகு அவர்களுக்கு உத்சாகம் ஏற்பட்டு புத்தி விழிப்பு வந்தது போல் இருக்கிறது. ஆனால் அவர்கள் அப்பொழுது அனுப்ப முன் வரவில்லை. ஆனால் ஜூலை, ஆகஸ்ட் மாதத்திற்கு அப்புறம் பெற்றோர்களைக் கண்டு அனுப்பும்படி சொன்னோம். இப்பொழுது 1,500, 2,000 குழந்தைகளை ஹரிஜன வகுப்புகளிலிருந்து சேர்த்திருக்கிறார்கள். அது சாத்தியப்பட்டது. ஆகவே அவர்களுக்கு இந்த திட்டத்தை எடுத்துக் காட்டி நல்ல வழி காட்டி அதைப் பற்று வற்புறுத்திச் சொல்லவேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். இந்த புது கல்வி முறை திட்டம் வாஸ்தவத்தில் கிராமங்களில் மிகவும் பிற்போக்கான வகுப்பினர்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் முக்கியமாக சலுகையை கொடுத்து அவர்கள் தங்களுடைய குழந்தைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பு வற்குத் தகுந்த வழி என்பதை சொல்லிவிட்டு இன்னும் இரண்டொரு விஷயங்களை மட்டில் எடுத்துச் சொல்லிவிட்டு முடித்துகொள்ளுகிறேன்.

" அவர்கள் பள்ளிக்கூடத்திற்கு ஒரு வருஷம் இரண்டு வருஷம் வரும்போது நல்ல அபிவிருத்தி உண்டாகும். ஆனால் அவர்களுக்கு விடு முறைகள் கொடுக்கும்போது விவசாய காலத்தை அனுசரித்து அவர்களுக்கு விடுமுறை கொடுக்கவேண்டும். அப்பொழுது தான் விவ சாய நாட்களில் அவர்கள் வீட்டில் இருந்து பெற்றோர்களுக்கு உபயோகமாக இருப்பார்கள். விவசாயத்திற்கு கடின உழைப்பு இல்லாத காலங்களில் அவர்கள் அதிகமாக பள்ளிக்கூடத்திற்கு வருவார்கள் என்பதை சொல் லிக்கொள்ள விரும்புகிறேன். மாற்று திட்டம் கொடுத்து இதை விட நல்ல வழியில் அமுல் நடத்தப்படுமானால் இன்னும் நலம். அப்படி இல்லை என்று சொல்வதால் நான் ஒன்று சொல்லிக்கொள்ளுகிறேன். முக்கிய மாக ஜனங்கள் இதை ஒரு பெரும் இயக்கமாக எடுத்து நடத்தி நூற்றுக்கு நூறு குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு வரவேண்டும் என்ற எண்ணத்துடன் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால் இந்த திட்டம் நல்ல வழிகாட்டியாக இருக்கும் என்பதை வற்புறுத்திச் சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்ளு கிறேன். "

* Sri K. C. PALANISWAMI GOUNDER :—" கனம் உப சபாநாயகர் 11-50 அவர்களே, நான் இந்த ஆரம்பக் கல்வித்திட்டத்தின் அடிப்படையில் தான் a.m. வெற்றி பெற்றேன் என்று சொல்லிக் கொள்ளுகின்றேன். (சிரிப்பு.) சபையி லுள்ள எல்லோருக்கும் நான் இதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை. தலைவர் அவர்களுக்கும் நன்கு தெரியும். ஆரம்பக் கல்வி திட்டத்திற்கு எதிராக மக்கள் தீர்ப்புக் கொடுத்திருகிறார்கள்.

" தற்போது குழந்தைகளுடைய நிலை எப்படி இருக்கிறதென்று பார்த் தால், கிராமங்களில் ஒவ்வொரு பள்ளிகளிலும் 4 ஆசிரியர்கள் இருக்கக் கூடிய பள்ளிகளில் 25, 30 பிள்ளைகள் தான்இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் புதுக் கல்வித் திட்டம் வந்தவுடனே, பிள்ளைகளை எல்லோரும் பள்ளியிலிருந்து நிறுத்திக்கொண்டார்கள். கிராமங்களில் திண்ணைப் பள் ளிக்கூடங்களை ஆரம்பித்து, அந்தப் பள்ளிகளுக்கு குழந்தைகளை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

"ஆசிரியர்களுடைய நிலைமையும் அதேமாதிரிதான். 2 ஆசிரியர் கள் இருக்கிற இடத்தில் 60, 70 பிள்ளைகள் இருந்து கொண்டிருந்தார்கள். தற்சமயம் 25, 30 பிள்ளைகள் தான் இருக்கிறார்கள். அந்தக் குழந்தைகளும் நின்றுவிடுவார்களோ, நம்மை வேலையிலிருந்து நீக்கி விடுவார்களோ என்று ஆசிரியர்களுக்கு ஒரு பயம். 30 பிள்ளைகள் வந்துகொண்டிருந்த இடத்தில் 15 பிள்ளைகள் இருக்கிறார்கள். இந்தப் 15 பிள்ளைகளுக்கு இரண்டு ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஒரு ஆசிரியர் 8 பிள்ளைகளையும், இன்னொரு ஆசிரியர் 7 பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். ஆனால், பயந்துகொண்டு போய் attendance தயார்

[Sri K. C. Palaniswami Gounder] [24th December 1953

செய்துவிடுகிறார்கள். அதே 7 குழந்தைகளை இரண்டு நேரமும் வர்ச்சொல்லி, மத்தியானம் வரும் பிள்ளைகளுக்கு பொய்ப்பெயர் வைத்து, கருப்பன், குப்பன் என்று attendance எழுதிக் கொள்ளுகிறார்கள். அவர்கள் ரொம்பவும் பீதி யடைந்து கொண்டும், கவலைபட்டுக்கொண்டும் இருக்கிறார்கள். என்பதைக் சொல்லிக்கொள்ளுகிறேன்.

" பெற்றோர்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பவேண்டுமென்றால், இப்பொழுது கிராமங்களில் முன்னேற்றம் வேண்டுமென்ற காலத்தில், நடுத்தர வகுப்பார்கள் பள்ளிக்கு பிள்ளைகளை கிராமப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதற்கு வசதி இல்லாததனால், நகரங்களுக்குச் சென்று விடுகிறார்கள். நகரங்களில் அதனால் இடைஞ்சல் ஏற்படுகிறது. இடநெருக்கடியும் ஏற்படுகிறது. கிராம முன்னேற்றத்திற்கு எந்த விதத்திலும் வசதி கிடையாது. ஆரம்ப பள்ளி இல்லாத கிராமங்கள் பல இருக்கின்றன. அந்த கிராமங்களுக்கு உடனடியாக பள்ளி வசதி செய்து கொடுக்க வேண்டும்.

" புது ஆரம்பக் கல்வித்திட்டத்தைப்பற்றி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். நமது மதிப்பிற்குறிய கனம் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் திட்டமானது மோசமானதாக இருக்காது என்று தான் மக்கள் நினைக்கிறார்கள். மோசமானதிட்டம் இல்லையென்று நினைத்தாலும்கூட, அந்த திட்டமானது நல்லதாக இருக்கிறதென்று நமக்குத் தோன்றவில்லை. பிற்காலத்தில் அந்தத் திட்டம் நல்ல பலனளிக்கும் என்று சொல்லப்படுகிறது. இரண்டுதலைமுறை மூன்று தலை முறைக்குப்பின் பின்னால் அந்தத் திட்டத்தை நமது வார்சுகள் வேண்டுமானால் கொண்டு வரட்டும், அப்பொழுதுள்ள பிள்ளைகளின் அறிவிற்கு எட்டக்கூடியதாக இருக்கலாம். இப்பொழுது வேண்டுமானால் இத்திட்டத்தை கைவிட்டுவிட்டால் சௌகரியமாக இருக்குமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

" கிராமங்களில் குழந்தைகள் அவரவர்களின் பெற்றோரின் தொழிலுக்குப் போகவேண்டுமென்றால் அது எப்படி சாத்தியமாகும் ? பெற்றோர்கள் கூலிவேலைக்குச் செல்லும்போது, குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு போக முடியுமா ? கூட்டிக்கொண்டு போனால், அவர்கள் வேலை எப்படி நடக்கும் ? குழந்தைகளை யார் கவனித்துக்கொள்வது ? இந்தச் சட்டங்களையெல்லாம் பார்த்து முதலாளியானவர், அவர்களை இனி வேலைக்கு வரவேண்டாமென்று சொல்லிவிடுவார்கள். ஆகவே அவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ள மாட்டார்கள். மில்களில் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளின் நிலைமையும் அப்படித்தான். மில்களுக்கு குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு போனால், அங்கு குழந்தைகள் என்ன செய்யும் ? பெற்றோரின் வேலையை எப்படி அங்கு குழந்தைகள் கற்றுக்கொள்ள முடியும்?

" புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை ஆதரித்துப் பேசினார்கள் சில நண்பர்கள். முன்பு தங்கள் கிராமத்தில் பள்ளிக்கு வராத குழந்தைகள் ஒரு புதியதிட்டம் வந்தவுடன் 4-ல் 2 குழந்தைகளை பள்ளிகளுக்கு அனுப்பி விட்டார்கள் என்று. கல்வி கற்கவேண்டுமென்றே இன்னும் நமது ஜனங்கள் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை. அவசியமா இல்லையா என்பது தெரியாத காலத்தில் ஒரு நேரம் படிப்பு என்று சொன்னால், அவர்களுக்கு முன்பே இந்தத் திட்டத்தில் அடிப்படை தெரிந்து, அனுப்பவில்லையோ என்னமோ ? ஒரு நேரம் ஆனவுடன் அனுப்பி யிருக்கின்றார் போலும். இந்தத் திட்டத்தை எப்படியாவது கைவிட்டுவிட்டு, பழைய முறையைக் கையாளும்படி கேட்டுக்கொண்டு, உண்மையாகவே குழந்தைகளுக்கு உபயோகப்படும்படியான வேறு ஒரு கல்வித்திட்டம் வரும் வரை, பழைய கல்வித் திட்டம் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்."

(At this stage Mr. Speaker occupied the Chair.)

12 noon. * SRI A. AYYARU :—" கனம் சபாநாயகர் அவர்களே இங்கு கொண்டுவந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை நான் ஆதரித்துப்பேச விரும்புகிறேன். இன்று புதிய ஆரம்பக் கல்வி திட்டத்தை தமிழ் நாட்டு உழைப்பாளர் கட்சி ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்து கமிட்டியின் ரிப்போர்ட்

24th December 1953] [Sri A. Ayyaru]

வரும் வரையில் இந்தத் திட்டத்தை நிறுத்திவைக்குமாறு கேட்டுக்கொண்டது. ஆனால் அதன்படி நடவாமலிருப்பது மிகவும் வருந்தத் தக்கது. முதல் மந்திரியார் கொண்டுவந்திருக்கும் இந்தப் புதிய ஆரம்பக் கல்வித் திட்டமானது தமிழ் நாட்டிலே உள்ள மக்களை ரொம்பவும் மேசமான நிலைக்குக் கொண்டுவரும் என்று நினைக்கிறேன். எனக்குமுன் பேசிய ஸ்ரீமதி சௌந்திரம் ராமச்சந்திரன் அம்மையார் அவர்கள் ஒன்று குறிப்பிட்டார், சென்னை, பம்பாய் போன்ற மாகாணங்களிலும் பெரிய நகரங்களிலும் இந்தத் திட்டத்தை வரவேற்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் முதல் மந்திரியார் கொண்டுவந்திருக்கும் கல்வித்திட்டத்தை ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. இந்தக் கல்வித் திட்டமானது நமது மாகாணத்திலுள்ள பிற்பட்ட வகுப்பினரும், தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் ரொம்பவும் பிற்போக்கு அடைவதற்கு ஏது வாயிருக்கிறது, என்று சொல்ல விரும்புகிறேன்.

" அடுத்தபடியாக இதற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் மூன்று மணி நேரத்தில் சிறு பிள்ளைகளுக்கு எப்படி படிப்பு வரும். குறிப்பாக 5, 6 வயதுள்ள 10 வயதுகுப்பட்ட பையன்கள் எவ்வாறு தகப்பனாருடைய வேலைகளைச் செய்யமுடியும் என்பதை கனம் முதல் மந்திரியார் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும், என்று கேட்டுக்கொள்ளுகிறேன். காலையில் சென்ற பையன்களுக்கு மாலையில் பள்ளிக்கூடம் கிடையாது. இப்படி ஒரு வேளையாக பள்ளிகள் நடந்தால் இந்தத் திட்டம் எப்படி நிறைவேறப் போகிறது. இந்தத் திட்டமானது வெளியிட்டிருக்கும் தன்மையைப் பார்த்தால் இதனால் நன்மைக்குப் பதிலாக தீமையே ஏற்படுமென்று தோன்றுகிறது. பொதுவாக கிராமங்களில் வீட்டிற்கு இரண்டு மூன்று பிள்ளைகளுக்கு மேல் படிப்பதே கிடையாது. எதற்காக அப்படிப்பட்ட இடத்தில் இத்திட்டத்தைக் கொண்டுவரவேண்டும். அப்படி இதை நுழைப்பதனால் ஆசிரியர்களுக்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது. உங்கள் ராஜகோபாலாச்சாரியார் கொண்டு வந்த திட்டமானது இப்படி நடக்கிறது என்று கூறுகிறார்கள். ஆதலால் இந்தத் திட்டத்தை வாபஸ் பெருமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தத் திட்டத்தினால் நாட்டிலுள்ள மக்கள் நல்ல முறையில் முன்னேற முடியாது என்ற காரணத்தினால் இதே முதல் மந்திரியாரும் மற்ற மந்திரிகளும் அனைவரும் சேர்ந்து இதைக் கைவிடுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

" அடுத்தபடியாக நமது ஜில்லாவில் பிற்பட்ட வகுப்பினர்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் மிகவும் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் படித்து முன்னேறுவதற்கு கல்வித் துறையில் அதிக சலுகைகள் காட்டவேண்டும். இன்றைக்கு திருச்சி நேஷனல் காலேஜில் 17 மாணவர்களில் ஹாஸ்டல் பணம் கொடுப்பதற்கு வசதியில்லாத 12 பையன்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை திரும்பவும் அனுமதிக்குமாறு வேண்டுகிறேன் ஹரிஜன மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கும்படியாக சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். உடையார்பாளையம் தாலூகாவிலே ஹரிஜனங்கள் படிப்பு வசதியின்றி இருக்கிறார்கள், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

" ட்ரெயினிங் ஸ்கூலில் போய் சேருவதற்காக எவ்வளவோ மாணவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு படிக்க இடமளிக்குமாறு ட்ரெயினிங் ஸ்கூல் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" அடுத்தப்படியாக நமது தாலூகாவிலே லேபர் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களுக்கு 1947-ம் வருஷத்திலிருந்து சம்பளம் உயர்வு அளிக்காமலேயே இருக்கிறார்கள். இதைப்பற்றி லேபர் ஆபீசரை நேரடியாக விண்ணப்பித்து கேட்டதற்கு, இவர் இன்னும் அரசாங்கத்திடமிருந்து உத்தரவு வரவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். ஆகையால் உடனடியாக இவர்களுக்கு சம்பளம் அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யும்படியாக கேட்டுக் கொள்ளுகிறேன்."

* SRI O. KORAN :—" Mr. Speaker, Sir, വിദ്യാഭ്യാസത്തെ സംബന്ധിച്ച് ഡോക്ടർ കെ. ബി. മേനോൻ അവതരിപ്പിച്ച കട്ട്മോഷനെ ഞാൻ ഒന്നാമതായി അനുകൂലിക്കുന്നു. നമ്മുടെ രാജ്യത്തിന്റെ ഇന്ന ജനാധിപത്യഭരണമാണ്. എന്നാൽ അതിന്റെ 12–05 p.m.

[Sri O. Koran] [24th December 1953

അനുയോജ്യമായിട്ടുള്ള ഒരു വിദ്യാഭ്യാസ സമ്പ്രദായമാണോ ഇന്നു നിലവിലുള്ളത് എന്നു നാം ചിന്തിക്കേണ്ടതുണ്ട് പ്രാഥമിക വിദ്യാഭ്യാസം കൈകാര്യം ചെയ്യുന്ന ഇന്നത്തെ പ്രാഥമിക വിദ്യാലയങ്ങളിലെ അദ്ധ്യാപകന്മാരുടെ സ്ഥിതി ഇന്നും വളരെ അധികം കഷ്ടതരമാണ്. ശമ്പളക്കമ്മീഷ്യനായ പരേലേർ - കമ്മിററിതന്നെ ശിപാശി ചെയ്തിട്ടുണ്ട് അദ്ധ്യാപകന്മാരുടെ വേതനം കൂട്ടിക്കൊടുക്കണമെന്ന്. ഇവരുടെ കാര്യത്തിൽ ഗവർമ്മേണ്ട് കൂടുതൽ കാര്യക്കമമായ ഒരു നയം അംഗീകരിക്കേ എന്ന കാണുന്നതു സ്വാഭാവികമാണ്. ഏതൊരു പദ്ധതിയും വിജയിക്കണമെങ്കിൽ ആ പദ്ധതിയുടെ കൈകാര്യകർത്തൃത്വം ഏറെറടുത്തിട്ടുള്ളവർക്ക് കൂടുതൽ ഉത്സാഹവും മനോഭാവവും ഉണ്ടാക്കിത്തീർക്കണമെന്നുള്ളതു ഒഴിച്ചുകൂടാത്തതാണ്. പ്രാഥമിക വിദ്യാലയങ്ങളിലെ അദ്ധ്യാപകന്മാർ, ആവശ്യപ്പെട്ടിട്ടുള്ളതു അവർക്കു ചുരുങ്ങിയ വേതനം 55 ക. യെങ്കിലും ആയിരിക്കണമെന്നുള്ളതാണ്. ഇതു എത്രയും ന്യായമായിട്ടുള്ള ഒന്നാണെന്നു ആരും സമ്മതിക്കും ഈ കാര്യത്തിൽ ഈയ്യിടെ ഗവർമ്മേണ്ടിന്റെ വിദ്യാഭ്യാസ മന്ത്രി ശ്രീമാൻ സുബ്രഹ്മണ്യം അവർകൾ പരേലേർ കമ്മിററിയുടെ റിപ്പോർട്ടിലുള്ള അററകുറ്റങ്ങൾക്കു മെമ്പർമാരുടെ അഭിപ്രായങ്ങൾ ആരാഞ്ഞു വേണ്ടപ്പെട്ട ഭേദഗതികൾ വരുത്തും എന്നു പാർലമെന്ററിയിൽ പ്രഖ്യാപനം ചെയ്തു എത്രയും സ്വാഗതാർഹമാണ്. മലബാറിൽ അദ്ധ്യാപകന്മാർക്ക് ഗവർമ്മേണ്ടുതന്നെ നേരിട്ടു മാസ്സടി കൊടുക്കുവാൻ ഏടുത്തിട്ടുള്ള പരിശ്രമവും സ്വാഗതാർഹമായ ഒരു കാര്യമാണ്. പക്ഷെ ഇതിൽ ഒരു കാര്യം ഞാൻ ഗവർമ്മേണ്ടിന്റെ ശ്രദ്ധയിൽ കൊണ്ടുവരുവാൻ ആഗ്രഹിക്കുന്നു. നമ്മുടെ പഴയ ബ്രിട്ടീഷ് സാമ്രാജ്യത്വം തുടർന്നുവന്നിട്ടുള്ള കച്ചവടതാല്പര്യം മുൻനിർത്തി കൈകാര്യം ചെയ്യുന്ന മാനേജ്മെന്റ് സമ്പ്രദായം ഇനിയും അവശ്യമുണ്ടോ എന്ന് ഗവർമ്മേണ്ട് ആലോചിക്കേണ്ടതായിട്ടുണ്ട്. അദ്ധ്യാപകന്മാർക്കു ഗവർമ്മേണ്ട് നേരിട്ടു വേതനം കൊടുക്കുവാൻ തയ്യാറാകുന്ന അവസരത്തിൽ ഈ ദുഷ്ടിച്ച മാനേജ്മെന്റ് സമ്പ്രദായം, ഗവർമ്മേണ്ടിന്റെയും അദ്ധ്യാപകന്മാരുടെയും നടുക്കുനിന്നു തുരങ്കം വെക്കുന്ന ഈ സമ്പ്രദായം, എന്തിന്നാണു നിലനിർത്തുന്നതെന്ന് ഗവർമ്മേണ്ടു പരിശോധിക്കുന്നതു നന്നായിരിക്കും. മാനേജ്മെന്റ് വിദ്യാലയങ്ങൾ ഗവർമ്മേണ്ടു ഏറെറടുത്തു നേരിട്ടു നടത്തുകയാണെങ്കിൽ അതു വളരെ അധികം നന്നായിരിക്കും എന്നുള്ള അപേക്ഷ ഈ അവസരത്തിൽ ഗവർമ്മേണ്ടിന്റെ മുമ്പാകെ കൊണ്ടുവരുവാൻ ഞാനാഗ്രഹിക്കുന്നു. പിന്നെ അദ്ധ്യാപകന്മാരുടെ തുച്ഛയായി 6 മണിക്കൂർ പ്രവർത്തനം ഇന്നും തുടർന്നു വരുന്നതിനെപററി അദ്ധ്യാപകന്മാരുടെ ഇടയിൽ നിന്നു ആക്ഷേപങ്ങൾ പൊങ്ങിക്കേൾക്കുന്നുണ്ട്. അവർ പറയുന്നതു ഇല്ലാതെ തുച്ഛയായി വിദ്യാർത്ഥികൾക്കു കഠിന്യമുള്ള വിഷയങ്ങൾ പഠിപ്പിക്കുന്നതു് ആരോഗ്യത്തിന്നു ദോഷകരമായ കാര്യമാണെന്ന്. മനശ്ശാസ്ത്രപരമായി ചിന്തിക്കുകയാണെങ്കിലും ഈ കാര്യത്തിൽ ചില ആനുകൂല്യങ്ങളും വിട്ടുവീഴ്ചകളും ചെയ്യണമെന്നുള്ളതു് ആവശ്യമാണ്. പ്രാഥമിക വിദ്യാഭ്യാസനിയമം കൂടുതൽ കൂടുതൽ പ്രചരിപ്പിക്കുവാൻ അദ്ധ്യാപകന്മാരെയും ഈ കാര്യത്തിൽ ഭാഗഭാക്കുകളാക്കുന്നതു് നന്നായിരിക്കും. മലബാറിനെ സംബന്ധിച്ചേടത്തോളം അവിടുത്തെ സുസംഘടിതവും സുശക്തവുമായ അദ്ധ്യാപക സമൂഹം വിദ്യാഭ്യാസകാര്യങ്ങളിൽ അഭിപ്രായം പ്രകടിപ്പിക്കുവാൻ സന്നദ്ധതയും കഴിവുമുള്ള ഒരു സംഘടനയാണെന്ന് പറയുന്നതിൽ എനിക്കു പ്രത്യേകം സന്തോഷമുണ്ട്. ഈ കാര്യത്തിലു അദ്ധ്യാപക പ്രശ്നങ്ങൾക്കു ഗവർമ്മേണ്ടു മർഗ്ഗണന നൽകും എന്ന് ഞാൻ ആഗ്രഹിക്കുന്നു. മററാനാം പറയുവാനുള്ളതു് ഇന്നത്തെ ഗവർമ്മേണ്ടിന്റെ അടിസ്ഥാന വിദ്യാഭ്യാസത്തെ സംബന്ധിച്ചാണ്. അടിസ്ഥാന വിദ്യാഭ്യാസത്തിൽ ഇന്നു ഗവർമ്മേണ്ടു കാര്യക്കമമായി മനസ്സിലുണ്ടോ എന്നു സംശയമാണ്. കാരണം അടസ്ഥാന വിദ്യാഭ്യാസം ടെയിനിങ്ങ് കഴിഞ്ഞുവന്ന അദ്ധ്യാപകന്മാർക്കു ഇന്നു അടിസ്ഥാന വിദ്യാഭ്യാസം പഠിപ്പിക്കുന്ന വിദ്യാലയങ്ങൾ കിട്ടുന്നില്ല. അതുകൊണ്ടു് അവർ പഠിച്ചുവരുന്ന അടിസ്ഥാന വിദ്യാഭ്യാസം ഉപയോഗിക്കാൻ കഴിയാതെ നഷ്ടപ്പെട്ടുകൊണ്ടിരിക്കുകയാണെന്നു പലസ്ഥലത്തുനിന്നും ആക്ഷേപങ്ങൾ കിട്ടിക്കൊണ്ടിരിക്കുന്നുണ്ട്. ഇന്നു നമ്മുടെ നാട്ടിനെ അഭിമുഖീകരിച്ചുകൊണ്ടിരിക്കുന്ന തൊഴിലില്ലാപ്രശ്നം പരിഹരിക്കുവാൻ ഗവർമ്മേണ്ടു് കൂടുതൽ സാങ്കേതിക വിദ്യാലയങ്ങൾ സ്ഥാപിക്കണം എന്നുള്ളതു ഒഴിച്ചുകൂടാത്ത ഒന്നാകുന്നു. ഇതിന്നുവേണ്ടി ഇന്ത്യാ ഗവർമ്മേണ്ടു് ചില പുതിയ പദ്ധതികൾ രൂപീകരിക്കുന്നുണ്ടെന്നു അറിയുന്നു. മലബാറിനെ സംബന്ധിച്ചാണെങ്കിൽ പല വിധത്തിലുള്ള തൊഴിലുകളും പഠിപ്പിക്കുവാനുള്ള സൌകര്യമുണ്ട്. മലബാറിലെ ഏററവും വലിയ ഉല്പന്നമായ കയറിന്നു ബേപ്പൂരിൽ മാത്രമാണ് ഒരു വ്യവസായശാലയുള്ളതു്. ഇങ്ങിനെയുള്ള സ്ഥാപന കൂടുതൽ കാര്യക്കമമാക്കി, ഉല്പാദനം വർദ്ധിപ്പിച്ചു നല്ല നല്ല മാർഗ്ഗവുകൾ കണ്ടുപിടിച്ചു തൊഴിലില്ലാ പ്രശ്നത്തിന്നു തെല്ലെങ്കിലും ഒരു പരിഹാരം

24th December 1953] [Sri O. Koran]

കാണുവാൻ സംധിക്കാ എന്നുള്ളതു തക്കമററ സംഗതിയാണ്. ഇന്ന വിദ്യാഭ്യാസത്തിന്റെ നിലവാരം കുറഞ്ഞുവരുന്നുണ്ടെന്ന ആക്ഷേപം കേൾക്കുന്നുണ്ട്. അതിന്റെ പ്രധാനകാരണം എന്തെന്ന ആലോചിച്ചാൽ ഇന്ത്യാ യൂണിയൻ വൈസ് പ്രസിഡണ്ട് ഡോക്ടർ രാധാകൃഷ്ണൻ പറഞ്ഞിട്ടുണ്ട് ഇന്ന വിദ്യാലയങ്ങളിലേക്കു കൊടുക്കുന്ന വേതനം വളരെ തുച്ഛമായതുകൊണ്ട് ശേഷിയും പ്രാപ്തിയുമുള്ള ആളുകളെ വിദ്യാലയങ്ങളിലേക്കു ആകർഷിക്കുവാൻ കഴിയാത്തതുകൊണ്ടാണെന്ന്. കൂടുതൽ കഴിവും പ്രാപ്തിയും ഉള്ള ആളുകളെ ആകർഷിക്കണമെങ്കിൽ കൂടുതൽ വേതനം കൊടുക്കുവാനുള്ള കഴിവ് ഗവമേണ്ട് കണ്ടുപിടിക്കുന്നതു് ഉചിതമായിരിക്കും. ഇന്ന അദ്ധ്യാപകപ്രവൃത്തിക്കു ആളുകൾ വരുന്നതു വേറെ തൊഴിൽ കിട്ടാതെ വിഷമിക്കുന്ന അവസരത്തിലാണ് എന്ന വരുമ്പോൾ വിദ്യാഭ്യാസത്തിന്റെ നിലവാരം താഴുന്നതിൽ ആശ്ചര്യപ്പെടുവാനുണ്ടോ എന്ന് ഞാൻ ചോദിക്കുന്നു. മറെറാന്ന പാലക്കാട്ടെ സംബന്ധിച്ചാണ്. പാലക്കാട്ടു പ്രധാനമായും കൃഷിക്കാരുടെ ഒരു താലൂക്കാണ്. കൃഷി വിഷയത്തിൽ കൂടുതൽ പരിജ്ഞാനം നൽകുന്ന കോളേജ് കോയമ്പത്തൂരിൽ മാത്രമാണുള്ളതു. അതിനുപകരം അവിടെയുള്ള വിദ്യാർത്ഥികൾക്കു കൃഷി പരിഷ്കരിക്കുവാനുള്ള പരിജ്ഞാനം നൽകുവാൻ ഗവമേണ്ടു വല്ല പദ്ധതിയും ആവിഷ്കരിക്കും എന്നു ഞാൻ ആശിക്കുന്നു. ഏറനാട്ടു, വള്ളുവനാട്ടു എന്നീ താലൂക്കുകളിൽ പിന്നോക്കസമുദായത്തിൽപെട്ട മുസ്ലീങ്ങളും മററു താഴ്ന്ന സമുദായക്കാരും ദാരിദ്ര്യത്തിൽ ജീവിക്കുന്ന ഒരു വിഭാഗമാണ്. അവർക്കു വിദ്യാഭ്യാസത്തിനുവേണ്ട ആനുകൂല്യങ്ങൾ നൽകുവാൻ ഇന്നും ഗവമേണ്ടിന്നു സാധിച്ചിട്ടില്ല. ഈ പിന്നോക്കസമുദായങ്ങൾക്കു വിദ്യാഭ്യാസത്തിന്നു കൂടുതൽ ആനുകൂല്യങ്ങൾ നൽകുവാനും മുകട ഫക്കയിൽ ഒരു ഹൈസ്കൂൾ സാധിക്കുവാനും ഞാൻ ഗവമേണ്ടിനോടു അപേക്ഷിച്ചുകൊള്ളുന്നു."

MR. SPEAKER :—" The hon. Member's time is up."

* THE HON. SRI C. RAJAGOPALACHARI :—" Mr. Speaker, Sir, here also I am intervening for a very limited purpose. The Hon. Minister for Education will deal with the debate. I say ' for a limited purpose ', because every one calls this scheme my scheme and every one makes an appeal to me to revise my view in this matter. I have been told by the Leader of the House that the Opposition do not intend to make this a voting matter. We have all the same an opportunity now to think." 12-10 p.m.

SRI S. SWAYAMPRAKASAM :—" But the Leader of the House should assure us that a separate day will be given to us for discussing this subject."

* THE HON. SRI C. RAJAGOPALACHARI :—" Yes, yes, we will not steal your chance; we cannot possibly do that. For, in any case, the Budget is coming. We cannot spend a pie without a discussion on the Budget. There is no need for unnecessary misapprehensions on that score. I am glad we have an opportunity now to discuss the matter when there will be no voting, because sometimes it is good to discuss in a calm mood without reference to the results to be obtained. In that way sometimes a discussion like this is often better than a discussion in order to produce an arithmetical result. It is for that reason also sometimes a discussion outside the House may even be better and this is going on. I am glad that everybody is thinking about the subject.

" I must congratulate, in the capacity of an elderly gentleman, the young gentlemen who spoke, some of them for the first time, in this connexion to-day and the manner in which they presented their case made a very favourable impression in my mind, whatever the difference may be with regard to the subject-matter.

[Sri C. Rajagopalachari] [24th December 1953

"I am sorry to say, however, that it is our misfortune in this State, in this part of the country, that the feelings with regard to castes and communities are so strong and are such an obsession in our unfortunate minds that very often we do not see the truth in respect of issues which are most important to the country. An obsession is always bad, but an obsession is *very* bad when we deal with such a fundamental matter as Education which is as important as the so-called Japanese Method for the paddy field. It has been appreciated and rightly understood that the nursery bed in the paddy field is of great importance. In the same manner, so far as our national prosperity, our culture and our progress are concerned, education is important, and I am sorry that unfortunately an obsession is there in everybody's mind.

"One hon. Member who spoke just now rightly referred to his belonging to a party of toilers, as it is called, *Uzhaippali Katchi*. But the presentation of the issue involved in this debate took no difference on account of the fact that he belonged to the *Uzhaippali* community. We are dealing with *Uzhaippu* and it is that problem that is worrying me and others who are dealing with this subject. But we are examining this point, I am sorry to say, only from the point of view of that section of the classes and the masses who by some fortunate events have come to the level to look forward to Government employment. The question is, however, substantially a much bigger question than that of preparing for Government employment. On the matter of Government employment, I may make this assurance in this debate without a vote—I give this assurance on the matter of employment—that if it is proved or if it is indicated even, in the course of the progress of this scheme that the change that I am proposing and for which I am standing, in any manner affects the prospects of those who wish to rise in the social scale, nearing Government employment, I would not at all hesitate to scrap it. I am confident and I am certain that this will not in any way affect the prospects of those people who want to look forward and rise to the levels from where Government servants are drawn. On the contrary, this will improve their chances. That is one part of the obsession. The other thing is, there is a feeling that the more hours we give to the school, the greater return we will get from it. This is born from the idea—which I was sorry to note even such a highly educated gentleman like the hon. Mr. Swayamprakasam gave vent to, though he made across the table a remark which was not intended to be part of the debate—that our boys will begin to forget during the off-hours what they learnt during school hours. The fundamental error in education; especially primary education, is to think that it is all a matter of memorizing. It is not for memorizing that we send our little children to school. It is for canalizing their thinking, it is for canalizing their habits *not* for memorizing. Memorizing begins not even in the High School stage; memorizing begins when you go up higher and higher, when you have to be equipped with tables and basic formulae. The child is not educated for memorizing. The more the teacher tries to put things into the brains, merely to be impressed in the memory tablets, the less fit he is for teaching.

24th December 1953] [Sri C. Rajagopalachari]

That is true. All educationists will accept it. So it is not a question of forgetting. The correct way of thinking, the correct way of approach, these should be brought out in the young child. That is primary education. So let there be no obsession about memorizing things and forgetting things. I am told by men who know the art of ' remembering ' that the more you try to remember, the less you will remember. Memory is not a voluntary act; memory is an involuntary phenomenon in the brain. Therefore, sometimes when you forget, if you do not worry about it, you will remember again. If you try to remember, you will not be able to remember. It is not memorizing that is important and it is not the true way to remember, repeating things over and over again. However, let us leave the problem to the educationists. I do want that this matter should be thoroughly examined by those who are competent to do it.

" I shall not go into the statement made that the Committee is a packed Committee. I am not interested in getting things done by devious methods. This matter relating to education, is not a new matter which I am getting up for political power. On the contrary, this has stood in the way, so to say, of my general political popularity. We must forget politics in this connection and we must really see whether our children cannot be better educated than they are now and whether more and more children cannot also be educated in the sense of primary education.

" The two objects that we have in mind are (1) more children should be brought into schools and (2) the education given at that stage to the children should be better and more impressive than it is now. If for those purposes my scheme is not good, it is not good; if it is good for those purposes, then it is good and should have nothing to do with caste and things of that kind which are irrelevant for this purpose.

" Some hon. Members have said that attendance is going down. 12-20 p.m.
So far as my information goes, attendance is improving, that is to say, more children are coming into the schools. It cannot happen everywhere, because a new think like this, especially in the background of an agitation that was started, frightens people. People are divided, so to say, on the things they do not understand. But it has its own effect. It will take some time for things to settle down, for things to be clearly understood and for honest and healthy reactions to begin. Now, so far as I am able to see, in some places where an understanding has been attempted to be made properly, the admissions to schools are improving. The percentage may vary from place to place. The percentage reached in Madurai district, if my information is correct, is 40 per cent increase in the strength of those elementary schools. Forty per cent is a great thing, if it is really correct. This is subject to examination and verification. In some places, it is less and in some other places it is still less. But we hope that ultimately, we will have at least 50 per cent, if not cent per cent increase, if this is properly done. There is no opportunity for it now.

[Sri C. Rajagopalachari] [24th December 1953

" ' Unfortunately for me and unfortunately for the scheme, the matter has been made into a political issue, a political debate, a furious debate, very closely allied to a communal debate, a communal issue and there are people who thrive on this kind of misrepresentation. Therefore, it is not a fair atmosphere. I am glad therefore some time is being gained, for one reason or other, for people to understand this properly. I do hope that the time will come when this question will be thoroughly and properly examined by those competent to do that, by those who have the good of the country at heart and not the good of this party or that party or this group or that group. The whole question is, ' what is it that the people want now '?

" Some people want me to drop it. They appeal to me—some in polite terms and some in mandatory terms—that we should withdraw it, that is, the extra three hours should be added to the school hour and the children should not be allowed to be free by themselves and should not be allowed to play in the field. I do not think any great misfortune will happen if we took time to examine this properly. What I do want is that there should be no disturbance to the educational system as a whole just now. The issue is taken up and dealt with in such a way that the teacher's mind is disturbed, that the parent's mind is disturbed, that the whole educational structure is being disturbed. It is not good. Let us deal with the modification in course of time. We will be able to do it. Nothing much will be lost. It is not possible now to make any changes. So, I appeal to hon. Members to express their mind quite freely, as they will. Let it be strong, I do not mind. Let nothing be decided on personalities.

" The *Hindu* may have its own opinion. I may mention for the information of hon. Members who are not in the Congress and who have not been in the Congress for a long time, that the *Hindu* is not my born ally, not a bit. On the contrary, the opposite. Therefore, there is nothing in saying, ' *even the Hindu* has said '. As I said already, ' even ' is quite wrong there. The *Hindu* never supported me, when I said—that was in 1919, 1920 and 1921—non-co-operate. *The Hindu* did not support me then. Of course, they are gentlemen, those in charge. They are friendly. They are also nationalistic; they are also patriotic; they have their own opinions. But nothing can be gained by a reference of this kind, namely, ' even the *Hindu* '; or ' even the *Mail* ', ' even the *Thina Thanthi* ', etc. Let us leave individual papers to themselves and individual gentlemen to themselves. We must see it is a psychological question, education being a part of psychology. This is a question of the science of psychology of the child.

" What should we do with children? We must deal with them in the right way. They are our own children, children of this country. If anybody is feeling that I am out to ruin the mass population of this country in the next generation, I must only pity the obsession they have in their mind. It is absolutely wrong.

24th December 1953] [Sri C. Rajagopalachari]

"I might have left it to be done by other people. Unfortunately I am convinced that large changes, for instance like removal of untouchability or entry into the temples or the modification of the basic position in regard to education, for how long should the children be taken away from their parents and imprisoned in the school, these changes cannot be done, so to say, by average people. The man must become important first, the man must become influential first and then alone he can take up difficult things of this type and hope to be heard. Supposing somebody says, 'Let us abolish all aided schools', can an ordinary politician make that proposal? It is impossible. But only somebody who is careless of his future can propose such a measure, if he is convinced about it. I say I am careless of my future. Therefore it is, I have taken up this difficult and important proposal. If it is good, let it be done. If it is not done, it can wait. I do not mind. It has waited so long. I am not doing this for the sake of any particular purpose, except education for its own sake. I want to make that assurance and request you, Sir, to carry on the debate."

* SRI S. T. ADITYAN :—"கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதல் மந்திரி அவர்கள் மனப்பூர்வமாக மனதிலே உள்ளதை வெளியிட்டுக் கூறினார். அவர்கள் இந்த விஷயங்களை தெளிவு படுத்தியதற்காக கடமைப்பட்டிருக்கிறேன். இது முக்கியமான விஷயம் என்று அவரே தெரிவிக்கிறார். இதைப் பற்றிய விஷயங்களை அவர் ஒப்புக்கொள்ளுகிறாரோ இல்லையோ அது வேறு விஷயம். இந்தப் புதிய கல்வித் திட்டத்தை ஆரம்பிக்கிறபோது இதில் உள்ளவைகளை எல்லாம் சரியா இல்லையா என்பதை ஆரஅமர யோசித்தார்களா? யாரையாவது யோசனைக் கேட்டார்களா? 12-30 p.m.

"சென்ற சட்டசபைக் கூட்டத்திலே ஒரு தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. அதன்படி ஒரு தனிப்பட்டவரின் ஆலோசனைக்கு மாறாக அதாவது இந்த புதியக் கல்வித்திட்டத்தை உடனடியாக நிறுத்திவைத்து பிறகு ஆராய ஒரு கமிட்டி நிறுவி அதன் சீபார்சின் படிதான் நடவடிக்கை என்பது இந்த சட்டசபையின் தீர்மானம்.

"ஆனால் நடந்தது என்ன? இந்தக் கல்வித் திட்டத்தில் ஆலோசனைக் குழுவுக்காக நிபுணர்களைத் தேர்ந்தெடுப்பதில் சட்டசபையில் ஆலோசனையோ அல்லது சம்மதத்தையோ அவர் பெறவில்லை. அன்றியும் எதிர்க்கட்சியினரையோ அல்லது இந்தத் திட்டத்தின் குறை பாடுகளைப்பற்றி விளக்கிய கல்வி நிபுணர்களையோ அந்த கமிட்டியில் கனம் முதல் மந்திரியார் சேர்க்கவில்லை. எவரையும் கலந்து கொள்ளாமல் ஆரஅமர யோசியாமல் கொண்டுவந்த கல்வித் திட்டத்தை ஆராய அவரே ஒரு குழுவை அமைத்துக்கொண்டு, இந்த நாட்டின் கல்வி முறை, பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், அவரவர் வாழ்க்கை வசதிகள் முதலியவைகளைப் பற்றி தெரியாதவர்களை அதில் அங்கத்தினர்களாக அமைத்து, அந்த குழுவினர் தந்திருக்கும் யாதாஸ்தை நமக்குத் தந்துள்ளார். இது நியாயமா? முறையா? ஜனநாயக ரீதியா? என்பதைப்பற்றி கவலைப்படவில்லை.

"முக்கியமாக இந்தத் திட்டத்தில் உபாத்தியாயர்கள் குறைக்கப்படவேண்டுமாம். இன்னொரு ஊரிலே இருக்கிற தொழிலாளி இந்தப் பிள்ளைகளுக்கும், உபாத்தியாயருக்கும் பயிற்சியளிக்க வேண்டுமாம். மற்றொன்று பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் முறையிலே ஷிப்ட் முறையை அனுசரிக்க வேண்டுமாம்.

"இவைகளெல்லாம் அனுபவ ரீதியாக கவனிக்கப்பட்ட முறைகள் என்று கனம் தலைமை அமைச்சர் அவர்கள் கூறுகிறார். உண்மையிலே இது அனுபவ ரீதியாக கொண்டுவரப்பட்ட திட்டமானால் ஏன் பள்ளிக்கூடங்

[Sri S. T. Adityan] [24th December 1953

களில் பிள்ளைகள் குறைந்து விடுகிறார்கள். சாயங்கால வேளைகளில் பள்ளிகளில் பிள்ளைகள் வருவதில்லை. காலையில் 60 பிள்ளைகள் வந்தால் மாலையில் 40 பிள்ளைகள்கூட வருவதாகத் தெரியவில்லை. சில கிராமப் பள்ளிக் கூடங்களில் 3, 4 பேர்கள்கூட படிக்கமாட்டார்கள் ;. இவர்களுக்கு ஒரு வாத்தியார். சில இடங்களில் பிரைவேட் டியூஷன் போல் சொல்லிக் கொடுக்கிறார், வசதியுள்ளவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு.

" இந்தப் புதியக் கல்வித் திட்டத்தில் மூன்று மணி நேரந்தான் கல்வி போதிக்கப்படும். அதற்கு பிறகு அந்தப் பிள்ளைகள் எங்கோ திரிந்து கொண்டிருக்கிறார்கள். வசதியுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளானால் அதிக நேரம் கூடுதலாக சொல்லிக்கொள்ள வசதி செய்து கொள்ளுகிறார்கள். நம் நாட்டில் கல்வித் துறையிலே வசதியுள்ளவர்கள், வசதியில்லாதவர்கள் என்று இரு பிரிவினர்களாக இருக்கிறார்கள். ஆகையினாலே இந்தத் திட்டம் ஜாதி அடிப்படையில் தீட்டப்பட்டிருக்கிறது என்று பலர் சந்தேகம் தெரிவித்திருக்கிறார்கள். இது வெளி வந்ததுமே ஆசிரியர்கள், அரசியல் வாதிகள், கல்வி நிபுணர்கள், எல்லோரிடமிருந்தும் எதிர்ப்பு வந்தது. இதை யெல்லாம் புறக்கணிக்கலாகாது. யாரையும் கலக்காமல் யாரைப்பற்றியும் கவலைப்படாமல், ஆரஅமர யோசியாமல் அவரசக் கோலாக அள்ளித் தெளித்திருக்கிறார் நமது கனம் தலைமை அமைச்சரவர்கள். இந்த திட்டத்தைப்பற்றி விபரமாகப்பேச இன்னொரு நாள் ஒதுக்கப்பட்டிருப்பதால் பின்னர் விவரிப்போம்.

" சென்னை ஆந்திர மஹிளா சபா மாணவிகள் நாகபுரி, ஆஜ்மீர் போன்ற இடங்களில் சென்னையிலிருந்தே பி.எ., எம்.எ. பரீட்சைகள் எழுதலாம். இம்மாதிரியாக அங்கே சென்னையைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பிள்ளைகள் பரீட்சை எழுதுகிறார்கள். அதற்காக அவர்களின் படிப்புத் தரம் குறைவென்று சொல்ல முடியாது. இண்டர்மீடியட் வகுப்பில் இன்றைக்கு பிள்ளைகள் அதிகமாக சேர்க்கப்படுவதில்லை. 100, 120 பிள்ளைகள் வைத்துக்கொண்டு நடத்தியது அந்தக் காலம். ஆனால், அது இப்போது மலைவேறிவிட்டது. இப்பொழுது ஒலி பெருக்கி முதலிய வசதிகள், இருக்கின்றன. விசாலமான இடங்கள் இருக்கின்றன. 200, 250, 1,000 ஆக ஒரு பள்ளியிலேயே சேர்க்கப்படலாம்.

" நம் நாட்டில் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்குப் போகும் மாணவர்களுக்கு வடிகட்டும் முறை கையாளப்படுகிறது. அதாவது 100-க்கு 25 பிள்ளைகள்தான் தேர்ந்தெடுத்து அனுப்பிக்கப்படுகிறார்கள். நேராக பரிட்சைக்கு அவர்கள் அனுப்பப்பட்டால் அந்த சமயத்தில் இரவும் பகலுமாக கஷ்டப்பட்டுப் படித்துத் தேறிவிடுவார்கள். பள்ளிக்கூடங்களில் செலக்ஷன் வைப்பது ஒரு விளையாட்டாக இருக்கிறது. ஆதலால் இம்முறையை கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" கல்லூரிகளில் 70, 75 மார்க்குகளை வாங்கின மாணவர்களைத் தான் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். அதுவும் கவர்ன்மெண்டு கல்லூரிகளில் தான் இவ்விதமாக நடை பெறுகின்றது. இந்த முறை மாறி குறைந்த மார்க்கு வாங்கிய மாணவர்களுக்கும் காலேஜில் அட்மிஷன் கிடைக்கும்படியாக ஏற்பாடு செய்யவேண்டும். குறைந்த மார்க்குகள் உள்ளவர்களைத் தான் நன்றாகப் படிக்கச் செய்ய ஒவ்வொரு காலேஜு தேவையாகும். அவர்கள் முன்னுக்கு வரப் பாடுபட வேண்டும். லண்டன் யுனிவர்ஸிடியில் சென்னையில் பி.எ. பட்டம் பெற்றவர்களை மெட்ரிகுலேஷன் வகுப்பில்தான் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். சென்னை யுனிவர்ஸிடியிலோ, லண்டன் மெட்ரிகுலேஷன் படித்தவர்களை நம்முடைய இண்டர்மீடியேட்டுக்குச் சமமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. அப்படியென்றால் நம்முடைய படிப்புதரம் குறைவாகுமா ? இந்த முறை நிற்க வேண்டும். சுதந்திரத்திற்கு முன்பு ஏற்பட்டது இது. நாடு சுதந்தர மடைந்தும் நம் யூனிவர்சிட்டி சுதந்தரம் அடையவில்லை.

" அடுத்தபடியாக தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் மிகவும் அவசியம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். முன்னால் இருந்த மந்திரி சபை இதுபற்றி ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருந்தது. கமிட்டியின் சிபார்சு

24th December 1953] [Sri S. T. Adityan]

இன்னமும் அமுல் செய்யப்படவில்லை. இச் சீர்திருத்தத்தைப்பற்றி பெரியார் ஈ.வே.ரா. எழுதி வந்திருக்கிறார். சமீபகாலமாக இச் சீர்திருத்தத்தைச் சுதேசமித்திரனும் பின்பற்றி வந்திருக்கிறது. இச் சீர்திருத்தம் நம் தமிழ் நாட்டுக்கு மிகவும் அவசியம். சர்க்காரும் இதை முக்கியமாக கருதவேண்டும். மெயில் பத்திரிகையில் சில வாரங்களாக ரோமன் எழுத்துக்கள் மூலம் தமிழை எப்படிக் கற்றுக்கொள்வது என்பது பற்றி வந்து கொண்டிருக்கிறது. அதை உபயோகித்தால் நலமாயிருக்கும். இதுபற்றி கனம் ராஜகோபாலாச்சாரியார் அவர்களும் அவர்களின் யோசனைகளை தெரிவித்துள்ளார். ஆதலால் சர்க்காருக்குக் கொடுக்கும் தமிழ் மனுக்களை ரோமன் எழுத்துக்களில் எழுதலாம் என்று அனுமதி கொடுத்தால் நலமாயிருக்கும், அதை அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்." 12-42 p.m.

(At this stage the Deputy Speaker occupied the Chair.)

* SRI V. BALAKRISHNAN :—" கனம் உதவி சபா நாயகர் அவர்களே, கனம் கல்வி மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மான்யத்தை ஆதரிக்கும் முறையில் இந்த புதிய கல்வித் திட்டத்தை முழு மனதுடன் வரவேற்கிறேன். இந்த் புதிய கல்வி திட்டதையும் மான்ய கோரிக்கையையும் எதிர்த்து பேசியவர்களை காலையிலிருந்து ஊக்கத்தோடு கவனித்து உட்கார்ந்திருந்தேன். ஆனால் அவர்கள் சொல்லும் வாதங்கள் அவ்வளவும் என்னை அவர்கள் பக்கம் சேர்க்காமல் சர்க்காருடைய மான்யத்தை ஆதரிக்கும்படியாக விரட்டுகிறது. ஏனென்றால் அவர்கள் சொன்னார்கள் நமது புது கல்வி திட்டம் நம்முடைய கொள்கை அடிப்படையில் இல்லை என்று சொன்னார்கள். முன்பு இருந்த கல்வி திட்டத்தை காட்டிலும் புதிய திட்டத்தில் ஓரளவு கொள்கை நிச்சயமாக இருக்கிறது என்று சொல்லுகிறேன். பழைய கல்வி திட்டத்தின்மேற் படித்தவர்கள் ஒவ்வொருவரும் படிக்கப் படிக்க கிராமங்களை வெறுத்து வருகிறார்கள். கிராமத் தொழிலை புரக்கனிக்கிறார்கள். கிராம மக்களை அவமதிக்கும்படியாகவும் இருக்கிறது. புதிய கல்வி திட்டத்தின்படி சிறு குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் படிக்கும் காலத்திலேயே மனதில் தங்களுடைய கிராமத்தினிடம் சிநேகத்துக்கும் கிராமத்திலுள்ள மக்களை ஆதரிக்கவும், கிராமங்களில் இருக்கும் தொழிலை தெரிந்து கொள்ளவும் சந்தர்ப்பம் இருக்கிறது. பழைய முறையில் படிக்கப்படும் பாடம் அவர்களை எந்த வழியில் கொண்டு போகிறது என்றால் அவர்கள் நல்ல உடுப்பு போட்டுக் கொண்டும் சல்லடம் போட்டுக் கொண்டும் காலர் போட்டுக் கொண்டும் ஹாட் போட்டுக் கொண்டும், படித்துவிட்டு நகரங்களில் திரிந்து கொண்டு சர்க்கார் வேலை கொடுக்கவில்லை என்று குறைகளைச் சொல்லிக்கொண்டும் இருக்கக்கூடிய நிலை ஏற்படுகிறது. அவர்கள் கிராமங்களுக்குச் செல்லாமல் சர்க்காரை குறை சொல்லிக்கொண்டும் இருக்கிறார்கள். அவர்கள் கிராமங்களை கவனிப்பது இல்லை. அந்த பழைய படிப்பால் அவர்கள் கிராமங்களை புரக்கனிக்கிறார்கள். அவர்களுக்கும் கிராமத் தொழிலுக்கும் சம்பந்தமும் அன்பும் இல்லாமல் இருக்கிறது. இவ்வித நிலைமை ஏற்பட்டிருப்பது எல்லோருக்கும் தெரியும். சில வருஷங்களுக்கு முன் புதுக்கோட்டை சமஸ்தான நிர்வாகத்தில் இருந்தபோது அங்கு ஆரம்ப கட்டாயக் கல்வி வெகு ஊக்கமாக நடத்த முயற்சித்தது. அப்படி நடந்து கொண்டு வந்த காலத்தில் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவது இல்லை. சட்டங்கள் இருந்தும் அவர்கள் அந்த சட்டத்தின்கீழ் பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாமல் அபராதம் கட்டி வந்தார்கள். இதைத் தெரிந்து கொண்டு அவர்கள் ஏன் அவ்விதம் அனுப்பாமல் இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்வதற்காக நான் கிராமங்களுக்குப் போய் பிள்ளைகளைப் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பாமல் ஏன் அதிகமாக அபராததைச் செலுத்துகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் சொன்னார்கள் ' எங்கள் பிள்ளைகள் படிக்க வேண்டியது தான், ஆனால் எங்களுக்கு தொழில் இருக்கிறது, எங்களுடைய தொழிலிற்கு அவர்கள் உதவுவதற்கு அவர்களுக்கு அவகாசம் கொஞ்சம் கொடுத்தால் நிச்சயமாக அவர்களை பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவோம். எங்களுடைய தொழிலில் உதவுவதற்கு காலையிலாவது அல்லது மாலையிலாவது அவர்களை வீட்டில் வைத்துக் கொண்டால் எங்களுக்கு உதவியாக இருக்கும். இப்பொழுது இரண்டு வேளை

[Sri V. Balakrishnan] [24th December 1953

யும் பள்ளிக்கூடம் வரவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆகையால் எங்களால் முழுநேரத்திற்கும் அனுப்பிவைக்க முடியவில்லை என்று சொன்னார்கள்.' இப்பொழுது சென்னை ராஜ்யத்தில் புதிதாக வந்திருக்கும் கொள்கை எற்கனவே புதுக்கோட்டை விவசாயிகளுடைய மனதில் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே இருந்து வந்தது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளுகிறேன். ஆனால் இந்த திட்டத்தை ஏன் அங்கு அப்பொழுதே கொண்டு வரவில்லை என்று கேட்கலாம். அப்பொழுது அங்கு புகுத்தப்படாததற்குக் காரணம் அந்த நிர்வாகம் பக்கத்திலுள்ள சென்னை மாகாண நிர்வாகத்தை இணைக்கப்பட்டு அதைப் பின் பற்றி வந்ததால் அதை அங்கு புகுத்த முடியவில்லை. அப்பொழுது புரட்சிகரமாகச் செய்ய சமஸ்தான சர்க்கார் முன் வர வில்லை. பழைய திட்டத்தில் மாறுதல் ஒன்றும் செய்யவதற்கு இல்லை. புதுக்கோட்டை விவசாயிகள் அப்போது என்னிடம் தெரிவித்த யோசனையைத்தான் இப்பொழுது கனம் ராஜாஜி அவர்கள் புதிய திட்டத்தில் கொண்டு வந்திருக்கிறார். இதை என்னுடைய தொகுதியில் பலர் வரவேற்கிறார்கள். இந்த திட்டத்தை ஆரம்பித்ததற்குப் பின் சில இடங்களுக்குச் சென்று நேரில் பார்த்தேன். ஒரு பள்ளிக்கூடத்திற்கு சென்றிருந்தேன். அந்தப் பள்ளிக்கூடத்தில், 5, 6 பெண்கள் வாசித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டு கேட்டேன். அதில் ஒரு பெண் என்ன சொல்லினது என்றால் 'நான் காலையில் வருவது இல்லை, மாலையில் தான் வருவேன். காலையில் என்னுடைய தாயாருக்கு உதவியாக வீட்டில் இருந்தேன், தங்கச்சியை எடுத்து மடியில் வைத்துக்கொண்டிருந்தேன், அப்பொழுது என்னுடைய தாயார் வீட்டு வேலைகளை கவனித்துக் கொள்ளுவாள், இன்னும் பல வேலைகளை காலையில் பார்த்து விட்டு மாலையில் பள்ளிக்கூடம் வருகிறேன்' என்று பதில் சொல்லியது. மற்றொரு சின்ன பெண்ணை விசாரித்தேன். அது என்ன சொல்லியது என்றால் 'நான் காலையில் தான் பள்ளிக்கூடம் வருவேன். மாலையில் வீட்டு வேலைகளுக்கு தாயாருக்கு உதவியாக இருப்பேன். தண்ணீர் எடுத்துக் கொடுப்பேன். தகப்பனார் தாயார் வயலுக்குப் போனால் வீட்டில் இருந்து கொண்டு வீட்டைப் பார்த்துக் கொள்ளுகிறேன். இன்னும் மற்ற வேலைகளில் தாயாருக்கு உதவியாக இருப்பேன்' என்று பதில் சொல்லிற்று. இந்தப் பெண்ணிற்கு சுமார் பத்து வயது இருக்கும். இதைப் பற்றி நான் கேட்டு பெருமை அடைந்தேன். அங்குள்ள ஒரு பையனைக் கண்டு கேட்டேன். அவனும் கள்ள சமூகத்தைச் சேர்ந்த பையன். தசசனல்ல. அவன் ஒரு வாரம் உழைத்து ஒரு கலப்பையைச் செய்திருந்தான். அவன் அந்தக் கலப்பையை எடுத்துக்கொண்டு வந்து என்னிடம் காட்டினான். அப்படிக் காட்டி அதை என் முன் தாக்கி நிறுத்தினான். அதை நன்றாகப் பார்த்து விட்டு இதை யார் செய்தது என்று கேட்டேன். அவன் தான் செய்ததாகச் சொன்னான். இதைச் செய்வதற்கு எவ்விதம் உனக்குத் தெரிந்தது என்று கேட்டேன். அவன் சொன்னான் 'நான் பள்ளிக்கூடத்திற்கு காலையில் போவேன். பிறகு ஐய்வு நேரங்களில் ஒரு தச்சன் வேலை செய்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். அவ்விதம் பார்த்துக் கொண்டிருக்கும் போது அதிலிருந்து எனக்கு ஒரு ஆசை தோன்றியது நானும் அப்படிப் செய்ய வேண்டும் என்று. அவ்விதம் எனக்கு ஊக்கம் ஏற்பட்டு அவரிடத்திலிருந்து கருவிகளை எடுத்து ஒரு மரத்தை எடுத்து கொஞ்சம் கொஞ்சமாக செதுக்கி சீர்திருத்தம் செய்து இவ்விதம் ஒரு கலப்பையைச் செய்தேன்' என்று சொன்னான். அதை அவன் சொன்ன போது ரொம்பவும் பெருமையுடன்தான் சொன்னான். ஆகையால் இந்த புதிய திட்டத்தின் கீழ் கிராமங்களில் தொழில் அபிவிருத்தி ஏற்பட்டு கிராமத்துடன் தொடர்பு வைத்துக் கொள்வதற்கு வசதி ஏற்படுகிறது. ஆகையால் இந்த திட்டத்தின் அடிப்படைக் கொள்கையானது கிராம மக்களுக்கும் கிராமத்திற்கும் தொடர்பு இருக்கக்கூடிய கொள்கையை இந்த திட்டம் தருகிறது. பழைய திட்டத்தின்படி ஆங்கிலம் படித்த பிள்ளைகள் தன்னுடைய தகப்பனோடு பேசுவதற்கு வெட்கப்படுகிறான். பழைய திட்டத்தின்படி ஒரு படித்த மாணவன் தன்னுடைய பெற்றோர்களைக் கண்டு வெட்கப்படுகிறான். கொஞ்சம் நஞ்சம் படித்து விட்டு தாலூகாவிற்குப் போன பிறகும் அதிலிருந்து பெரிய தலை நகருக்குப்போன பிறகும் தகப்பன் வருவதைக் கண்டாலேயே தன்னுடைய தகப்பன் ஒரு விவசாயி, தன்னுடைய தலையை சீவி இருக்கமாட்டார், உடை ஊத்தையாக இருக்கும்,

24th December 1953] [Sri V. Balakrishnan]

முழங்கால் வரையில் களி மண் ஒட்டிக் கொண்டிருக்கும் என்று அவரைக் காண வெட்கப்படுவான். ஆனால் பையன் அங்கு நகரத்தில் அலங்காரமாக தலையை சீவிக் கொண்டும், அழகான முறையில் உடை உடுத்துக் கொண்டும் முகத்திற்கு ஹாஸ்லின் ஸ்னோ போட்டுக்கொண்டும் இருப்பான். இப்படி இருக்கக்கூடிய பையன் தன்னுடைய விவசாயித் தகப்பனைக் கண்டு வெட்கப்படுகிறான். மற்றவர்களின் மத்தியில் தன்னுடைய தகப்பனை தன் தகப்பன் என்று சொல்லிக்கொள்ளக்கூட வெட்கப்படுகிறான். இந்தப்படி ஆகிவிடுகிறது பழைய காலத்து படிப்பு. ஏன் ? கிராமத்துடன் தொடர்பு இல்லாததால் கிராமத்தை புரக்கணிக்கிறார்கள். கிராமத்தில் பிறந்து கிராமத்தில் படித்தவன் கிராமங்களையே வெறுக்க ஆரம்பிக்கிறான். அதனால் விவசாயிகள் புரக்கணிக்கப்படுகிறார்கள். சுதந்தர இந்தியாவில் ஒவ்வொரு கிராமத்தையும் மலரச் செய்ய வசதி இல்லாமல் போய் விட்டது. இந்த திட்டத்தின்படி கிராமங்களின்ன சிறு தொழிலை கற்றுக் கொள்வதற்கு இடம் இருக்கிறது. தாய் தகப்பனை மதிப்பதற்கு இடம் இருக்கிறது. கிராமத்திலுள்ள தொழிலை புதுப்பிக்க இடம் இருக்கிறது. இங்கு பெரிய உத்யோகத்தில் இருந்தாலும் சிறு தொழில்களை கற்றுக் கொள்வதால் கிராமத்தினிடம் அபிமானம் ஏற்படுகிறது. அன்பும் மனதில் வளருகிறது. அதனால் அவர்களுடைய படிப்பும் பண்பாடுகளும் வளர்ந்து கொண்டு வருகிறது. படித்தவர்கள் கிராமத்தில் ஒற்றுமையாக இருந்துகொண்டு வாழ்க்கையை நடத்துவதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது. ஆனால் சோஷலிஸ்ட் கட்சி தலைவர் சொன்னார் (Education is not suited to the genious of this country, what is the genious of the country. It is agriculture) ஆனால் நான் சொல்லுகிறேன், விவசாயம் செய்யும் மக்களுக்கு விவசாயத்தில் வசனம் செலுத்தும் மக்களுக்கு வாழ்க்கையை மலரச் செய்வதற்கு இந்த புதிய கல்வி திட்டம் இடம் தருகிறது என்று நான் சொல்லுகிறேன். இதைப் போலுள்ள கல்வி திட்டம் எப்பொழுது இங்கே இருந்தது. இந்தக் கல்வி திட்டத்தைத் தவிர வேறு ஒரு சிறந்த கல்வி திட்டம் நம்முன் இருக்கிறதா ? இது ஒரு சிறந்த திட்டமேயொழிய பிற்போக்கு திட்டமல்ல. வேறு ஒரு சிறந்த திட்டத்தை அமுலில் கொண்டு வந்து நடத்திப் பார்ப்பதற்கு இடமில்லை. சமீபத்தில் தான் இந்தக் கல்வி திட்டம் வந்தது. அது சரிவர அமுலில் நடக்கிறதா இல்லையா, அதில் நன்மை இருக்கிறதா அல்லது தீமை இருக்கிறதா என்பவைகளைப் பார்ப்பதற்குள் இந்த கல்வி திட்டத்தை எதிர்த்துக் கொண்டு வந்து பல விதமான பழிச் சொல்களைச் சுமத்துவதும் இந்தக் கல்வி திட்டத்தை அப்படியே கைவிட்டு விடவேண்டும் என்று சொல்வதும் சரியல்ல. இது சரியான அரசியல் முறையுமல்ல. இப்பொழுது கவர்ன்மெண்ட் கொண்டு வந்த திட்டத்தைக் காட்டிலும் நன்மை செய்யக்கூடிய கல்வி திட்டம் வேறு இல்லை. வேறு ஒரு சிறந்த கல்வி திட்டம் இல்லாத வரையில் இந்தக் கல்வி திட்டத்தை ஏற்றுக்கொண்டு நடத்தித் தான் பார்க்க வேண்டும். இந்த கல்வி திட்டத்தில் (Fundamental) (அடிப்படையான) குற்றம் ஏதாவது இருப்பதாகத் தெரியவில்லை. இந்தக் கல்வி திட்டம் தோற்றால் மக்கள் தான் அதற்குப் பொறுப்பு. மக்களும் இந்த திட்டத்தில் ஒத்துழைக்க வேண்டும். பழைய திட்டம் ஆடு மாடுகளைப் போல் பள்ளிக் கூடங்களில் அடைக்கப்பட்டு பிறகு உத்யோகம் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கும் மனப்பான்மைக்குக் காரணமாக இருக்கிறது. பழைய திட்டத்தில் ஆபத்து இருக்கிறது. இந்த திட்டத்தில் அடிப்படைக் கொள்கை அடிப்படை லட்சியம், இருக்கிறது. இவைகளெல்லாமுள்ள சிறந்த திட்டம். நம்முடைய சீர்கேடான கிராமம் மேல்ஏறிச் செல்வதற்கு இது தகுந்த திட்டம் என்பது என்னுடைய அபிப்பிராயம் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

SRI S. VADIVELU :—" உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுப் பிரேரணைகள் அச்சிடப்பட்டு புஸ்தக ரூபமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வெட்டுப் பிரேரணைகள் கொடுத்திருப்பவர்கள் அவைகளைப் பிரேரிக்க முடியாமலும் அதைப்பற்றி பேச முடியாமலும் இருந்தால், எப்படி பொதுமக்களுடைய குறைகளை அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்வதற்கு முடியும் ? வெட்டுப் பிரேரணை கொடுத்த ஒவ்வொரு உறுப்பினரையும் பேச அனுமதிப்பது நியாயம் இல்லையா என்று கேட்கின்றேன்." 12-52 p.m.

[24th December 1953

DEPUTY SPEAKER :—" It is not possible to give a chance to all the Members of the House to speak on this cut motion. The cut motion was moved and opportunity has been given to many Members of this House to speak. Many Members have taken part in the discussion. Only three hours have been allotted for this Demand and it is not possible to extend the time. So I request the Hon. Minister for Finance and Education to speak."

* SRI K. VINAYAKAM :—" I rise on a point of order, Sir. Mine is a pertinent one (laughter). Among the hon. Members who have given notice of cut motions, I happen to be one. In the order of sequence I must have been one of those who should have been called upon to speak. On the other hand, I find I have been omitted from the list. I don't grudge my having been omitted. But hon. Members who have not given notice of any cut motion and some hon. Members who had no intention at all to partake in this debate have been called upon to speak whereas Members who gave notice of cut motions have not been called upon. Will the Chair explain why such a discrimination is made?"

DEPUTY SPEAKER :—" The Leader of the House will explain."

